Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-1037)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 29 (30.06.2003) திங்கட்கிழமை இதழ்: 271

# பாதுகாப்புக் கட்டமைப்பு மாற்றப்படுகின்றது;

# ஜனாதிபதி அதிகாரத்தை குறைக்க முயற்சி!

## நாடாளுமன்றத்தில் புதிய சட்டமூலம் விரைவில்

(கொழும்பு)

**பாதுகாப்புக் கட்டமைப்பை முற்றிலுமாக மறுசீரமைக்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உள்ள பாதுகாப்பு அதிகாரங்களைக் குறைப்பதுமான நோக்கில் - உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டமூலம் (Higher Defence Control Act) ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முயற்சிசெய்து வருவதாகத் தெரியவருகிறது.**

உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டமூலத்தின் வழியே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உள்ள பாதுகாப்பு அதிகாரங்களைக் குறைத்து, தேசிய பாதுகாப்புச் சபையிடம் அவற்றை ஒப்படைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சட்டமூலத்தின் அடிப்படையில், தேசிய பாதுகாப்புச்சபை, பாதுகாப்புச்சபை, இணைந்த படைத் தலைமையதிகாரிகள் குழு, கூட்டு நடவடிக்கைக் கட்டளைத் தலைமையகம் என்பன உருவாக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

**தேசியப் பாதுகாப்புச் சபை**

(National Security Council)

உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு அறிக்கை முழுமையானதாக இல்லை!

### புலிகளின் பதில் வெளிவரலாமென எதிர்பார்ப்பு

விடுதலைப் புலிகளின் எண்ணெய் தாங்கிக் கப்பல், சர்வதேசக் கடற்பரப்பில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக, கண்காணிப்புக் குழு விடுத்துள்ள விசாரணை அறிக்கையிலுள்ள விடயங்கள் பற்றிய தமது ஆட்சேபத்தை, விடுதலைப் புலிகள் வெளியிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அறிக்கையொன்றும் விரைவில் வெளிவரலாம் எனவும் தெரியவருகிறது.

கப்பல் தாக்கப்பட்டது பற்றியும், அதிலிருந்த போராளிகள் நிலை தொடர்பாகவும் - பூரணமான தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில் -

கண்காணிப்புக் குழுவின் அறிக்கையிலுள்ள முரண்பாடுகள், தெளிவீனங்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் கருத்து, இந்த அறிக்கையில் தெரிவிக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

## டக்ளஸ் தேவானந்தா திடீர் இந்தியப் பயணம்

(புதுடெல்கி)

ஈ.பி.டி.பியின் செயலாளர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் சமயத்தில் - அவர், ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் உயர் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவற்றைவிட, இந்தியாவில் உள்ள ஏனைய அரசியற் கட்சித் தலைவர்களையும் டக்ளஸ் தேவானந்தா சந்திக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பஸ் கவிழ்ந்து 12 மாணவர் காயம்!



திருமலை - கட்டைபறிச்சான் விபுலானந்தா வித்தியாலய மாணவர்கள் சென்ற பஸ் வண்டி, தம்பலகாமத்தில் தடம்புரண்டதில், இரு ஆசிரியர்களும், 12 மாணவர்களும் படுகாயமடைந்தனர். (படம்:சசிக்குமார்)

## அரசின் புதிய திட்டவரைபுடன் வெஸ்பேர்க் வன்னி செல்வார்!

### கொழும்பில் இரகசிய முயற்சிகள் தீவிரம்

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது தொடர்பான அரசாங்கத்தின் திட்டவரைபை விடுதலைப் புலிகளிடம் கொண்டுசேர்ப்பதிலும், இத்திட்டவரைபு குறித்த புலிகளின் பதிலை, அரசாங்கத்துக்கு எடுத்துரைப்பதிலும் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் முக்கிய பங்காற்றவுள்ளார்.

இதற்காக - வெஸ்பேர்க், அடுத்த வாரம் முழுதும் கொழும்பில் தங்கியிருப்பார் எனக் கூறப்படுகிறது.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவராக இருந்த ஹான்ஸ் பிறட்ஸ்கர் அமெரிக்கா சென்றுள்ளதால், அவருடைய கடமைப் பொறுப்பை, முன்னாள் தூதுவரான வெஸ்பேர்க்கே கவனிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைபு பற்றிய தகவல்கள், அரசாங்கத்தினால் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டவரைபினை முழுமை செய்யும் நடவடிக்கையில் சட்டமா அதிபர் கமலசபேசன் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்ட வரைபு, அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் புலிகளிடம் கையளிக்கப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா இன்று கிளிநொச்சி வருகிறார்!

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் ஒட்சுகா செய்சுரோ, இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சியில், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன், ஜப்பானியத் தூதுவர் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

இன்று காலை ஆரம்பமாகவிருக்கும் இப்பேச்சுக்களின்போது, ரோக்கியோ மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும், அமைதி முயற்சிகள் பற்றியும் இருதரப்புக்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## பாதுகாப்பு ஆலோசனைக்கு ஜூனைட் தலைமையில் குழு!

### பொலிஸ் மா அதிபருக்கு உதவுமாம்

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து - பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக, உள்துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர் பாதுகாப்புக் குழு (High Powered Committee) ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பது பற்றிய திட்டத்தினை - இந்தக் குழு, பொலிஸ் மா அதிபருக்கு வழங்கவுள்ளது.

இக்குழுவில், உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜூனைட், நீதி அமைச்சின் செயலாளர் தயா ஜெயதிலக, பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி சட்டத்தரணி ஜெயந்த குணசேகர, முன்னாள் பொலிஸ் மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம், ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட தேவா றொட்றிக்கோ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## புலிகள் பற்றி தகவல் கொடுப்போரில் தேவைக்கதிக நம்பிக்கை வேண்டாம்!

### பொலிஸ் புலனாய்வாளருக்கு ஆனந்தராஜா எச்சரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் புலனாய்வுச் சேவை அதிகாரிகளை அவதானமாகச் செயற்படுமாறு, பொலிஸ் மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. புலனாய்வு அதிகாரிகள் மற்றும் தகவல் வழங்குவோரின் பாதுகாப்பில் கூடிய கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இன்ஸ்பெக்டர் தாப்ரூ - விடுதலைப் புலிகள் பற்றிய தகவல் வழங்குவோரிடம் தேவைக்கு அதிகமாக நம்பிக்கை வைத்திருந்ததால் இந்த நிலை ஏற்பட்டது என்றும் -

தகவல் தருவோருடன் எவ்வாறு தொடர்புகளைப் பேணுவது எனத் தெரியாவிட்டால், அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துவிடும் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி. -975)

# குறிப்பிட்ட காலத்துக்குள் மின்கட்டணங்கள் செலுத்தாதோருக்கு மேலதிக கட்டணங்கள்

## வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம்

குறிப்பிட்ட காலஎல்லைக்குள் மின் கட்டணத்தை செலுத்தாதோருக்கு மேலதிக கட்டணம் அறவிடுகின்ற வர்த்தமானி பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மொத்த வழங்கல் பாவனையாளர்களுக்கும், சாதாரண வழங்கல் பாவனையாளர்களுக்கும் தனித்தனியே மேலதிகக் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளன.

மொத்த வழங்கல் பாவனையாளர்களுக்கு, மின்பட்டியல் வழங்கப்பட்ட 15 நாட்களுக்குள் கட்டணத்தைச் செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலஎல்லைக்குள் கட்டணத்தை செலுத்தாவிட்டால், 15 நாட்களின் பின் நிலுவையோடு - 2 சதவீத மாதாந்த வட்டி அறவிடப்படும். 30 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தாவிட்டால், மின் துண்டிப்பு அறிவித்தலுடன் மின்சாரம் துண்டிக்கப்படும். துண்டிப்பின் பின்னரும், தொடர்ந்து நிலுவைக்கு 2 சதவீத வட்டி அறவிடப்படும்.

மீளவும் மின்னிணைப்பு வழங்கும்போது வட்டியுடன் சேர்த்து, இணைப்புக்கட்டணமாக 800 ரூபா செலுத்திய பின்னரே, மின்னிணைப்பு வழங்கப்படும் என்றும், அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரண மின்வழங்கல் பாவனையாளர்கள் பட்டியல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து, 30 நாட்களுக்குள் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். நிலுவை செலுத்தப்படாத காலத்தின் அரைப்பகுதிக்கு - 2 சதவீத வட்டியும், இணைப்புக்கட்டணம் 800 ரூபாவும் செலுத்தவேண்டும் என, வர்த்தமானி பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சித்தாந்த ஞானக்களஞ்சியமான பண்டிதமணி மு.கந்தையா

சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் களஞ்சியமாக எண்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து, ஈழநாட்டுக்குப் பெருமை சேர்த்தவர் - ஏழாலை தந்த இலக்கியக் கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா. இவர் உலகம் போற்றும் உதாரண புருஷராக வாழ்ந்தவர். ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, கனடா, இலண்டன் முதலான நாடுகளிலெல்லாம் அவரது நினைவு, பசுமை பெற்று விளங்குகின்றது.

19.06.1917 இல் ஏழாலை மேற்கு, முத்தர் - அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வராக அவதரித்தார். தனது ஆரம்பக் கல்வியை ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் தொடங்கினார்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராயும், இலண்டன் கலைமாணி சமஸ்கிருத சிறப்புப் பட்டதாரியாயும் தன்னை வளர்த்துக்கொண்ட பண்டிதர் கந்தையா, ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்கவராய் விளங்கினார். கீழைத்தேய மரபுவழிக் கல்வியில் மட்டுமன்றி மேலைத்தேய நவீன கல்வியிலும் ஆளுமைமிக்கவராக மலர்ந்தார்.

இவருக்கு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 'பண்டிதமணி' எனும் பட்டத்தை வழங்கியது. அவர்பெற்ற ஏனைய பட்டங்கள், பரிசுகள், பாராட்டுக்கள் எண்ணிலடங்கா.

நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களையும் 300 இற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

எண்பத்தைந்து ஆண்டுகாலம் வாழ்ந்து, 10.07.2003 இல் அயரா அன்பின் அரன் கழல் சேர்ந்த பண்டிதர் மு.க., செந்தமிழ் சைவப் பண்பாட்டைத் தன் உயிரினும் மேலாக மதித்தவர். சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறான எந்தச் செயல் நிகழ்ந்தாலும், அதனை மறுத்துக் கண்டிக்கத் தவறாத சான்றோனாக விளங்கினார்.

இன்று - அன்னாரது முதலாவது ஆண்டு நிறைவுத் திதியில் - 'சித்தாந்த ஞானக் களஞ்சியம்' நூல் வெளியிடப்படுகின்றது.

- பண்டிதர் வ.பேரின்பநாயகம்.

# போக்குவரத்து நெருக்கடிகளால் அதிகரித்துவரும் விபத்துக்கள்!

யாழ்ப்பாணத்தில் என்றும் இல்லாத வகையில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால், நாளாந்தம் பலர் காயமடைந்து வருவதுடன், அவ்வப்போது சிலர் மரணமடையவும் நேரிடுகிறது.

வீதி விபத்துக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்தமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அதாவது- ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர், அதிகளவான வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டு - போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனால், வாகனங்களின் எண்ணிக்கையும், நடமாட்டங்களும் திடீரெனக் குறிப்பிட்ட காலப்பகுதியில் அதிகரித்துள்ளன.

மற்றையது, யாழ்ப்பாணத்தின் பல்வேறு வீதிகள் இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளன. இதனால, நகரில் ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்துக்கு செல்வதற்கு, எல்லோரும் குறிப்பிட்ட ஒரு சில வீதிகளையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

அத்துடன், யாழ்.நகரத்தை அண்டியுள்ள மக்கள் தமது காணி எல்லைகளை முன்நகர்த்தி - குடியிருப்புக்களையும், வர்த்தக நிலையங்களையும் அமைத்து வருகின்றனர். இதனால், வீதிகள் ஒடுங்கி அவற்றின் அகலம் குறைவடைந்து வருகிறது.

அடுத்து, யாழ்.நகரத்தில் உள்ள வர்த்தகர்கள் தமது பொருள்களை வீதியின் ஓரத்தில் காட்சிக்கு வைத்துள்ளனர். இதனாலும், வீதிகள் ஒடுங்கிப் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு வருகின்றன.

அடுத்து, போக்குவரத்துச் சபையின் பஸ்களும், தனியார் மினிபஸ்களும் போட்டிபோட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் முந்துவதற்காக வாகனங்களை வேகமாக ஓட்டுவதுடன், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேலாக பயணிகளையும் ஏற்றிச்செல்கின்றனர். இதுவும் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணமாக உள்ளது.

இதேவேளை - சிறுவர்கள் வாகனம் ஓட்டுவது அதிகரித்துள்ளதும், இளைஞர்கள் தமது திறமையைக் காட்டுவதாக மோட்டார்சைக்கிள்களையும், வாகனங்களையும் வேகமாக ஓட்டுவதும் - பல்வேறு சந்தாப்பங்களில் விபத்துக்களுக்குக் காரணமாயிருக்கின்றன.

இவற்றைவிட முக்கியமான இன்னொரு விடயம் - குடாநாட்டு வீதிகள் சிதைவடைந்து இருப்பதும், வீதிகளுக்குக் குறுக்கே வெட்டப்படும் குழிகள் நிரப்பப்படாமல் - பள்ளமும் மேடுமாக இருப்பதும், வீதிவிபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. இத்தகைய குழிகளால் பல வீதிகளில் பயணஞ்செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகளினாலும், யாழ்.குடாநாட்டில் அடிக்கடி வீதிவிபத்துக்கள் ஏற்பட்டு வருவதுடன், பலர் காயமடைந்தும் மரணமடைந்தும் வருகின்றனர்.

**லிவிங்ஸ்ரன்**

வீதிவிபத்துக்களை குறைக்க வேண்டுமாயின், மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கும் - காரணிகளுக்கும் தீர்வு காணப்படல் வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள், தம்மோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும்.

இதனைவிடுத்து, சந்திகளில் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸார் நிற்பதாலோ அல்லது போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்களிடமிருந்து தண்டப்பணத்தினை அறவிடுவதாலோ வீதிவிபத்துக்களை தடுக்கமுடியாது என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்

## மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் - 2003

தலைவர்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி - யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.)

இடம்: பிரதான மண்டபம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

காலம்: 2003 ஜூலை 02, 04, 07, 09, 10

### நினைவுப் பேருரைகள்:

"எம் மண்ணின் கல்வி வளர்ச்சிக்கும் பண்பாட்டு எழுச்சிக்கும் உழைத்த எம்மவர்கள் நினைவாக...."

**சான்றோர் கௌரவிப்பு:**

"எம் மண்ணிற்குத் தொண்டாற்றும் எம்மவர்களைக் கௌரவித்தல்"

### நிகழ்ச்சி I

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

பொருள் : "இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்நோக்கும் சிக்கல்கள்."
(புலம்பெயர்ந்தோர் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டது.)

பேருரையாளர்: கலாநிதி கி.விசாகரூபன்
(முதுநிலை விரிவுரையாளர்- தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

காலம் : 02.07.2003 மாலை 4.30 மணி.

### நிகழ்ச்சி II

பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரை.

பொருள் : "ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்"

பேருரையாளர்: பேராசிரியர் சபா ஜெயராசா
(கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

காலம் : 04.07.2003 மாலை 4.30 மணி

### நிகழ்ச்சி III

பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேருரை.

பொருள :"பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்"

பேருரையாளர்: கலாநிதி S.சிவலிங்கராஜா.
(முதுநிலை விரிவுரையாளர் - தமிழ்த்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.)

காலம் : 07.07.2003 மாலை 4.30 மணி

### நிகழ்ச்சி IV

பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை.

பொருள்: "கல்வி மூலமாகத் தேசத்தைக் கட்டியெழுப்ப வழிகாட்டும் நவீன முகாமைத்துவப் பிரவேசங்கள்"

பேருரையாளர்: திரு.பா.தனபாலன் M.Phil,Dip in Ed.
[உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்), யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி]

காலம் : 07.07.2003 மாலை 4.30 மணி.

### நிகழ்ச்சி V

**சான்றோர் கௌரவிப்பு**

"எம்மண்ணில் அறப்பணிகள், பொதுப்பணிகள் ஆற்றிவரும் நல்லாசான் தன்னலங்கருதாக் கருமவீரர்"

**செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படுவார்.

காலம் : 10.07.2003 மாலை 4.30 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி-1134)

**பீடாதிபதி, உப பீடாதிபதிகள்,விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், முகிழ் நிலை ஆசிரியர்கள்.**


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



பெயர் - ந.ரம்மியா
முகவரி -சூரிச், சுவிற்சர்லாந்து.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## சாப்பாட்டுக்கு கியூவில் நிற்கும் அனுருத்த ரத்வத்த!

(கொழும்பு)

'சாப்பாட்டுக்காக கியூவில் நிற்பது எனக்குப் புதிதல்ல. ஆனால், சிறையில் இலக்கம் தருவார்கள். இங்கு இலக்கங்கள் இல்லை'

இவ்வாறு -

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில், கியூவில் நின்று சாப்பாடு எடுத்தபோது குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டுக்கு செல்வதற்கு அனுருத்த ரத்வத்தவுக்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது. அத்தோடு, மாநாட்டில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் எல்லோரும் கியூவில் நின்று தங்களுக்கான சாப்பாட்டுப் பார்சலை எடுத்துச் சாப்பிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்குத் தொடர் - 01

| | |
|---|---|
| தலைப்பு | - பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் புதிய சமாதான முயற்சியும். |
| ஆற்றுபவர் | - திரு.கே.ரி.கணேசலிங்கம். (விரிவுரையாளர் - அரச அறிவியற்துறை) |
| இடம் | - யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடம். |
| காலம் | - இன்று (30.06.2003) மாலை 3 மணிக்கு. |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(401) வரலாற்றுக் கழகத்தினர், யாழ்.பல்கலைக்கழகம்.


ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை



10.30, 2.30, 6.30

(சி-973)

நிறஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த

மிலிட்ரி

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE BOUN IDENTITY

(சி-974)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் சிறப்புற வாழ்த்துகிறோம்.

SELVANS DIESEL ENGINEERS

செல்வன்ஸ் டீசல் எஞ்சினியர்ஸ்

கோப்பாய் சந்தி, பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

## நூறு பொலிஸாருக்கு இத்தாலியில் பயிற்சி!

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாருக்கு, வெளிநாடுகளில் சிறப்புப் பயிற்சிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இலங்கைப் பொலிஸாரின் திறமைகளை அதிகரிப்பதற்காகவும், பொலிஸாரின் நடவடிக்கைகளைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்காகவும், அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

முதற்கட்டமாக, இத்தாலியில் வைத்து ஒரு தொகுதி பொலிஸாருக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. நூறு பொலிஸாரை பயிற்சிக்காக, அனுப்பிவைக்குமாறு இத்தாலி அரசாங்கம் கோரியிருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மட்டக்களப்பிலும் இடைத்தங்கல் முகாம்!

## யுனிசெப் - புலிகள் இணைந்து நடவடிக்கை

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புனர்வாழ்வுக்காக மட்டக்களப்பு மாவட்டத்திலும் இடைத்தங்கல் முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் யுனிசெப் நிறுவனமும், விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்கருதி- அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வகையில், கிளிநொச்சியில் ஒரு இடைத்தங்கல் முகாம் அமைக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னொரு கட்டமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியான ஆயித்தியமலையில், இன்னொரு இடைத்தங்கல் முகாம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்த இடைத்தங்கல் முகாமை அமைப்பதற்காக, யுனிசெப் நிறுவனம் ஒருகோடி இருபது லட்சம் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்திருப்பதாக, யுனிசெப் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இடைத்தங்கல் முகாம் அமைப்பது தொடர்பாக ஆராய - ஆயித்தியமலைக்குச் சென்ற யுனிசெப் பிரதிநிதி, கரடியனாற்றில் உள்ள தேனகம் விருந்தினர் விடுதியில், புலிகளின் மட்டு - அம்பாறை மூத்ததளபதி கேணல் கருணாவையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதாகவும் தெரியவருகிறது.

## அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் கொழும்பு வருவர்!

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் விரைவில் கொழும்பு வரவிருப்பதாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அழைப்பின்பேரிலேயே இவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்கள் இலங்கையின் பொருளாதார, வர்த்தக முதலீட்டு வாய்ப்புகள் குறித்து நேரில் ஆராயவுள்ளதாக - வொஷிங்ரனிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை - அமெரிக்காவில் தங்கியுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட, உலகவங்கி மற்றும் சாவதேச நாணய நிதியத்தின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.



தீவிரப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு நகரப் பாதுகாப்பின் ஒரு கட்டமாக - பொலிஸார் வீதியால் செல்லும் வாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிடுவதைப் படத்தில் காணலாம்.

# ரயில் கட்டண உயர்வு யோசனைக்கு ஜனாதிபதி சந்திரிகா கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

ரயில் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, அமைச்சர் திலக் மாரப்பன முன்வைத்த சிபார்சுக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படாதுள்ளதைச் சுட்டிக்காட்டி, ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை அமைச்சர் திலக் மாரப்பன கோரியிருந்தார்.

இந்த ரயில் கட்டண அதிகரிப்புக்குறித்து, ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கு, ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறப்பட்டுள்ள இந்த அறிக்கையில், ரயில் கட்டணங்களை அதிகரிக்காமல் பயணிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கு ஏற்றவாறு, ரயில் சேவைகளை மறுசீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஐந்து வருடகாலத் திட்டத்தின் அடிப்படையில் நிர்வாகத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி கூட்டணி இறுதிப் பேச்சு நாளை நடக்கும்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்த உடன்படிக்கையை இறுதி செய்வது தொடர்பாக, ஆராய்வதற்காக இரு கட்சிகளினதும் முக்கிய தலைவர்கள் நாளை மீண்டும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை, ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற சந்திப்பில், கூட்டணி குறித்து ஜே.வி.பி மற்றும் சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் விரிவாக ஆராய்ந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான இந்தச் சந்திப்பு, சுமார் நான்கு மணிநேரம் நீடித்ததாக, தெரியவருகின்றது. இந்தச் சந்திப்பில், கூட்டணிக் கட்சியைப் பதிவு செய்தல் மற்றும் பொதுவான சின்னத்தைத் தெரிவு செய்தல் என்பன தொடர்பாகப் பேசப்பட்டது.

எனினும், இறுதியான முடிவுகளை எடுப்பதற்காக, நாளை செவ்வாய்கிழமை இரு கட்சிகளினதும் தலைவர்கள் மீண்டும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

கூட்டணிக்கட்சியின் புதிய கொள்கை, இந்தச் சந்திப்பில் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பின் பின்னர், இரண்டு கட்சித் தலைவர்களும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளனர்.

எதிர்வரும் எட்டாம் திகதி, ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் இதுவரை எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்றும்-

இரு கட்சிகளும் ஒரே வழியில்தான் சிந்தித்து வருவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றிபெறும்!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

(கொழும்பு)

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில், முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

ஜா-எலவில் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைக் குழப்பி, மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் குழுவொன்று முயற்சி செய்துவருகின்றது.

இத்தகைய குழப்பும் நடவடிக்கைகளை வெற்றிகொண்டு, சமாதான முயற்சிகளில் வெற்றிபெறுவோமென்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனில் மெண்டிஸ் கொலை தொடர்பாக வத்தளை பிரதேசசபைத் தலைவர் கைது!

மேல்மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சுனில் மெண்டிஸ் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் - வத்தளை பிரதேச சபைத் தலைவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை, வத்தளை பிரதேச சபைத் தலைவரைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றத்தில், ஆஜர் செய்து விளக்கமறியலில் வைக்கும் உத்தரவைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை இந்தப் படுகொலை தொடர்பாக, பொலிஸார் மேலும் இருவரைக் கைதுசெய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சுனில் மென்டிஸ் கொலை தொடர்பாக தமக்குப் பல பயன்தரு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இக்கொலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும், உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக்கொலை தொடர்பாக- பொலிஸார், ஐக்கிய தேசியக் கட்சி முக்கிய அரசியல்வாதி ஒருவரை விசாரணை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மேலும் முப்பது நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தகவல்



(கொழும்பு)

அடுத்த வருடம் மேலும் முப்பது நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை இலங்கை அரசாங்கம் செய்துகொள்ளும் என்று, வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற, வர்த்தக மாநாட்டில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைப் பல்வேறு நாடுகளுடன் செய்துகொள்வது தொடர்பாக, தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி அடுத்த வருடத்தில், மேலும் முப்பது நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படும். தாய்லாந்து, சிங்கப்பூர், எகிப்து, சவூதி அரேபியா, ஈரான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, மடகஸ்கார், வியட்னாம் ஆகிய நாடுகள் இவற்றுள் குறிப்பிடத்தக்க சில நாடுகளாகும்.

இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்னர், நான்காயிரம் வகையான உள்ளூர் உற்பத்திப் பொருட்களை அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று ஒப்பந்தங்களைப் பாகிஸ்தானுடன் செய்துகொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது எனவும், அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கலைப் போட்டிகள்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, கலைப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. (55)

# ஆறு மாதங்களில் மட்டும் ஐயாயிரம் ஆயுதங்கள் மீட்பு

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் ஐயாயிரத்து 328 சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மீட்கப்பட்டிருப்பதாக, பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஷொட் கண்கள் 72, ரி-56 துப்பாக்கிகள் 26, ரிப்பிட்டர்கள் 04, கல்கட்டாஸ்கள் 138, றிவோல்வர்கள் 18, பிஸ்டல்கள் 11, ரவைகள 1206, மகசின்கள் 3023, கிரனேட்கள் 124, 84 எஸ்.துப்பாக்கி 01, ஆபத்து மிக்க வெடிபொருட்கள் 635 ஆகிய சட்டவிரோத ஆயுதங்கள், வெடிபொருட்களே மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, கடந்த ஆறு மாத காலத்தில் குற்றச்செயல்கள் வெகுவாகக் குறைந்திருப்பதாகவும்,

கடந்த வருடம், 9882 பாரிய குற்றச்செல்கள் இடம்பெற்ற போதிலும இந்த வருடம் முதல் ஆறு மாதங்களிலும் 2312 குற்றச்செயல்களே இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தலைமை தெரிவித்துள்ளது.

## செஞ்சிலுவைச்சங்க கருத்தரங்கு

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கொழும்புத் தலைமையத்தால், நடத்தப்படவுள்ள, அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல், சம்பந்தமான கருத்தரங்கு, எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் - யாழ்ப்பாண செஞ்சிலுவைச்சங்கக் கிளையிலிருந்து ஐந்து தொண்டர்கள் பங்குபற்றவுள்ளதாக, யாழ்.கிளையின் தலைவர் தெரிவித்துள்ளார். (122)

## வடமராட்சி கிழக்கில்

# 'நிக்கொட்' வழங்கிய தளபாடங்கள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிப்பு

(ஆழியவளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - மீளத்திறக்கப்பட்ட பாடசாலைகளுக்கு, 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி தளபாடங்கள், கடந்த புதன்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டன.

மருதங்கேணிக் கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் - மேற்படி தளபாடங்களைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

இப்பிரதேசத்தில் - மீள இயங்கி வரும் 10 பாடசாலைகளுக்கு, 'நிக்கொட்' நிறுவனத்தினால் வழங்கப்படும் என ஒப்புதல் அளிக்கப்பட்ட தளபாடங்களில், 30 வீதமான தளபாடங்களே தற்போது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தளபாடங்கள் வழங்கப்படடுள்ளதையடுத்து, நிலத்தில் இருந்து கல்வி கற்ற ஒருபகுதி மாணவர்களின் அவலநிலை தீர்க்கப்பட்டுள்ளது.

ஏனைய தளபாடங்களும் விரைவில் வந்துசேரவுள்ளதாக, 'நிக்கொட்' நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (122)

# 13 வருடங்களின் பின்னர் திறக்கப்பட்ட பாடசாலை!

(உடுவில்)

கடந்தகால வன்செயல்களால், மூடப்பட்ட ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை - 13 வருட இடைவெளிக்குப் பின், அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற விழாவில்- ஜி.ரி.இசற் நிறுவனத்தின் சர்வதேச புனரமைப்புப் பிரிவின் இணைப்பாளர் ஜோகன் பிறாக்மின் பாடசாலையைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில்- வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர், ஏழாலை வடக்கு கிராம சேவையாளர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (101)

# உடுவில் பாடசாலைகளுக்கிடையில் சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டி

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான, சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டிகள் - எதிர்வரும் ஏழாம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள், அன்று நண்பகலுக்கிடையில் தமது பொருட்களைக் கொண்டு வந்து காட்சிப்படுத்தவேண்டும் எனவும், அவை வேறு நிகழ்ச்சிகளில் இடம்பெறாத, புதிய ஆக்கங்களாக இருக்க வேண்டுமெனவும் - சித்திரம், ஓவியம் என்பன போட்டியாளர்களினாலேயே வரையப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் - ஒருபாடசாலையில் இருந்து, ஒவ்வொரு வகையிலும் மூன்று பொருட்கள் காட்சிப்படுத்தப் படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டமட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெறும் போட்டியாளர்கள், வலய மட்டப் போட்டிகளில் தமது ஆக்கங்களைக் காட்சிப்படுத்த அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# பயிற்சி முடித்த 34 ஆசிரியர்கள் வடமராட்சி கிழக்குக்கு நியமனம்

(ஆழியவளை)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து வெளியேறிய, வடமராட்சிப்பகுதியைச் சேர்ந்த 34 ஆசிரியர்கள் - மருதங்கேணிக் கல்விக்கோட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளதாக, வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மீள்குடியேற்றம் நடைபெற்ற இடங்களில், அதாவது - மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் இயங்கிவரும் 10 பாடசாலைகளுக்கு, இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய இருபத்துநான்கு ஆசிரியர்களும் இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஏற்கனவே நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

# மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யத் தீர்மானம்

காரைநகர் கடற்படைமுகாம் மீது தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, கொழும்பு மேல்நீதி மன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞன் - தனக்கு விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளார்.

1990 ஓகஸ்ட் முதலாம் திகதிக்கும் - 1991 மே 29 ஆம் திகதிக்கும் இடையில், காரைநகர் கடற்படை முகாமைத் தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில், சண்முகசுந்தரம் ரகுபதி என்ற இளைஞருக்கு மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது.

கடந்த புதன்கிழமை வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்புக்கு எதிராகவே, அடுத்தவாரம் மேன்முறையீடு செய்யப்படவுள்ளது எனத் தெரியவருகிறது.

# ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கு கதிர்காமம் நோக்கி யாத்திரை!

(கொழும்பு)

உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி அமைப்பினால் - ஆன்மநேய ஒருமைப்பாட்டு அமைதிக்கான கதிர்காம யாத்திரை மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த 13 ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்டு, 27 ஆம் திகதி கதிர்காமத்தை அடையும் வகையில், இந்த யாத்திரைக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையான நான்கு நாட்கள் - பரந்தன், கிளிநொச்சி, வட்டக்கச்சி, விசுவமடு, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மாங்குளம், துணுக்காய், கனகராயன்குளம், வவுனிக்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலும்-

அடுத்து 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை - திருகோணமலை, நிலாவெளி, சாம்பல் தீவு, வில்லூன்றி மற்றும் தம்பலகாமம், கிளிவெட்டி, சங்குவேலி, சம்பூர், வெருகல் ஆகிய இடங்களிலும் -

24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் தரித்து, பல்வேறு சமய நிகழ்வுகளிலும் யாத்திரையில் ஈடுபடுவோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சமூகப் பங்களிப்புப் பற்றி ஜி.ரி.இசற் செயற்திட்டம்

(உடுவில்)

பாடசாலைகளின் அபிவிருத்தி, புனர்நிர்மாணம் போன்றவற்றில் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துவரும் ஜி.ரி.இசற் நிறுவனத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாகச் சமூகப் பங்களிப்பைப் பெற்று, முன்னேற்றகரமான செயற்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக, ஜி.ரி.இசற்றின் சமூக செயற்பாட்டுக் குழுவினர், எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளின் அதிபர்களைச் சந்திக்கவுள்ளனர். (101)



வட - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால், திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் நடத்தப்பட்ட கராட்டிப் போட்டியில்- 80 கிலோ பிரிவுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிக்கொண்ட பருத்தித்துறையைச் சேர்ந்த ஆ.கணேசமூர்த்தி மற்றும் 80 கிலோ - 75 கிலோவுக்கு இடைப்பட்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற பி.அன்ரன் ஞானசீலன், 50 கிலோவுக்குட்பட்ட பிரிவு கராட்டிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன் ஆர்.சிறிதரன் ஆகியோர், வட - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அதிகாரி என்.விமலராசாவுடன் எடுத்துக்கொண்ட படத்தைக் காணலாம். (17)

# மூன்று பாடசாலைகளுக்கு ஜப்பான் நிறுவனம் உதவி

ஜப்பான் ஆசியாவுக்கான பாலம் நிறுவனம் - பளைப் பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியுதவியினை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினூடாக வழங்கியுள்ளது.

இதன்படி, தற்பொழுது நிரந்தர கட்டடம் எதுவுமின்றி இயங்கும் கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலயத்திற்கு, அரை நிரந்தரக் கட்டடம் ஒன்றும், புதிதாக மூன்று மலசலகூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதுடன், கிணறு ஒன்றும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மேலும், 10 வருடங்களின் பின் மீண்டும் இயங்கத் தொடங்கியிருக்கும் இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது (115)

### கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

விசுவமடு - முல்லைத்தீவைச் சேர்ந்த இராமலிங்கம் உமாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின்

# கற்கைநெறி 60ஆவது ஆண்டுவிழா பண்டாரநாயக்க மண்டபத்தில்!

(மீசாலை)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறியின் 60 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவையொட்டிய நிகழ்வுகள், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள அனைத்து தொழில்நுட்ப நிறுவனங்களையும் சேர்ந்த மாணவர்களும் இதில் கலந்து கொள்ளவுள்னர்.

இந்த நிகழ்வில், கலந்துகொள்வதற்காக யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் - நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (25)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் மீண்டும் சத்திரசிகிச்சைகள் ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. எம்.எஸ்.எவ் வைத்தியக்குழுவினர் தமது சேவையை முடித்துக் கொண்டு சென்றதால், கடந்த ஐந்தாம் திகதியுடன் சத்திரசிகிச்சைக் கூடம் இயங்காமல் இருந்து வந்தது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன்- எம்.எஸ்.எவ் வைத்தியக் குழுவிலிருந்து விலகிய, எம்.வரோனிக் என்னும் பெண் வைத்திய நிபுணர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சத்திரசிகிச்சையை மேற்கொண்டு வருகிறார். இவர் தானே மயக்கமருந்து கொடுத்து, தானே சத்திரசிகிச்சையையும் செய்து முடித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் ஒருவர் இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

டொக்டர் வரோனிக், பெண் வைத்திய நிபுணராக இருந்த போதிலும், பொது சத்திரசிகிச்சை மற்றும் மகப்பேற்று சத்திரசிகிச்சை, மயக்க மருந்து கொடுக்கும் பணிகளையும் மேற்கொள்ளக்கூடியவராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (17)

# பத்து பொதுக் கிணறுகளை புனரமைக்க நடவடிக்கை

(பளை)

பளைப் பகுதியில் பயன்படுத்தப் படாத நிலையிலுள்ள 10 பொதுக் கிணறுகளைப் புனரமைப்பதற்கு, பளைப் பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மல்வில், இத்தாவில், சந்துகுத்தி, சோரன் பற்று, கச்சார்வெளி, செல்வபுரம், முகாவில் ஆகிய பகுதிகளிலுள்ள பொதுக்கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு வருகிறன. (115)

## இலக்கியச்சோலை

## சிறுகதை

# சாகாவரம்

கதவைத் திறந்துகொண்டு குளியல் அறையைவிட்டு வெளியே வந்தாள் சகுந்தலா..

இன்னும் சிறிதுநேரத்தில் சந்திரன் வேலையால் வந்துவிடுவான். அதற்குள் எல்லாவற்றையும் தயாராக்க வேண்டும். இல்லையேல் மூக்குநுனியில் கோபம் சிவப்பாக இனம்காட்ட, சந்தர்ப்பம் சூழ்நிலைகளை மறந்து கத்த ஆரம்பித்துவிடுவான்.

தலையை அரைகுறையாக உணர்த்திக் கூந்தலை வாரி நுனியில் சிறிதாக முடிச்சொன்றைப் போட்டுப் பின்னால் தள்ளியவாறு சுவாமி படங்களுக்கு முன்னால் சென்றாள். இயந்திரகதியில் சில ஊதுபத்திகளைப் பெட்டிக்குள்ளால் உருவி, கொளுத்தி, அதன் கமகம வாசனையில் சில விநாடிகள் ஏதோ ஒரு தேவாரத்தை முணு முணுத்து முடிக்க முன்னரே சமையலறைக்கு விரைந்தாள் சகுந்தலா.

இரண்டு தினங்களாக அடுப்பு வெப்பத்துடனும் எண்ணெய் மணத்துடனும் போராடிப் போராடி செய்து வைத்த சிற்றுண்டிகளை வெள்ளித் தாம்பாளங்களில் இட்டு வரவேற்பறை மேசையில் வரிசையாக அடுக்கினாள்.

அவற்றின் நடுவே வண்ணத்தால் அலங்காரம்செய்த 'கேக்'கைக் கொண்டுவந்து வைத்தாள்.

முன்னால் நின்று பார்த்தாள்.

'விடியோவுக்கு வடிவாக இருக்கும்.'

இல்லையேல் சந்திரன் துள்ளிக் குதிப்பான். எவர் இருந்தாலும், அவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் அவளை வார்த்தைகளாலேயே அவமானப்படுத்திவிடுவான்.

இத்தகைய அவமானங்கள் ஆரம்பத்தில் அவளின் இதயத்தை ஈட்டிகளாகத் தைத்து இரத்தமில்லாக் காயங்களை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். இப்படியொரு வாழ்க்கை தேவைதானா.... எத்தனை நாளைக்குத்தான் சந்திரனின் ஆதிக்கத்துக்கு அடிபணிந்து அடங்கிப் போய் ஊமையாயிருப்பது? அறுத்துக்கொண்டு போய்விடுவோமோ?

ஆரம்பத்தில் இப்படியான எண்ணங்கள் ஏற்பட்டதுண்டு. காலப்போக்கில் அவமானங்கள் யாவுமே பழகிப்போனவைகளாய், அவள் 'இதுதான் வாழ்க்கை' என்ற நிலைக்கு வந்துவிட்டாள்.

இன்று அவர்களின் திருமணநாள். இரண்டாவது ஆண்டு.

வேலைமுடித்து நண்பர்களுடன் வருவதாகக் கூறியிருந்தான் சந்திரன். வரும்பொழுது எல்லாம் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்ற உத்தரவு வேறு.

அந்த 'எல்லாம்' என்பதில் பல அர்த்தங்கள் உண்டு. அது சகுந்தலாவுக்கு மட்டும்தான் புரியும்.

மற்றவர்களின் வீட்டு விசேசங்களுக்குக் கொஞ்சம் கூடக் குறையாதவிதத்தில் பலகாரவகைகள்- நாலைந்து கறிகளுடன் சாப்பாடு- நண்பர்களுடன் சேர்ந்து குடிக்கும் தண்ணிக்கு ஏற்றமாதிரிக் காரத்துடன் கூடிய பொரியல்- இவைதான் சகுந்தலாவுக்குப் புரிந்த அந்த 'எல்லாம்'.

'எல்லாம்' தயாராக சந்திரனின் வரவிற்காகக் காத்திருக்க, தன்னை அலங்காரம் செய்யவென மேசைக்கண்ணாடியின் முன்னால் சென்றாள் சகுந்தலா.

படாடோபமான அலங்காரம் அவளுக்குப் பிடிக்காத தொன்று. எளிமையும் தூய்மையும் அவளுக்கு மிகவும் விருப்பமானவை.

ஆனால் சந்திரன்...!

திருமணநாளில் அவள் எளிமையாக நின்றால்- 'என்ரை மரியாதையைக் கெடுக்கவெண்டே உப்பிடி நிக்கிறாய்? நான் உனக்கொண்டும் வேண்டிக் கொடுக்காமை வீட்டுக்கை பூட்டி வைச்சிருக்கிறன் எண்டெல்லே கதைக்கப் போறாங்கள்?' என்று சீறுவான்.

இந்த இரண்டாண்டுகளில் சந்திரன் கத்துவான், சந்திரன் துள்ளுவான், சந்திரன் சீறுவான் என்று அவள் சிறுகச்சிறுகத் தன்னை அவனுக்காக மாற்றியதுதான் அவள் அனுபவித்த வாழ்க்கை.

இரண்டாண்டுகளுக்கு முன்னர்....!

அப்பா வாயெல்லாம் பல்லாக வந்தார்.

'குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கொண்டு குடுத்திருக்கு...'

'என்னப்பா.... என்ன விசயம்...?'

அம்மாவுக்குப் புரியவில்லை.

சகுந்தலாவுக்கும்தான்.

'கோமளம்.... மூத்தவளுக்கு எப்பிடிக் கலியாணம் காட்சியெண்டு பார்க்கப் போறனெண்டு கவலைப்பட்டன். இப்ப அதுக்கு ஒரு வழியை ஆண்டவன் காட்டியிருக்கிறான். கல்வீட்டுப் பாக்கியம் அக்காவின்ரை பொடியன் ஜேர்மனியிலையெல்லே இருக்கிறான்.... அவன் சகுந்தலாவைக் கேக்கிறானாம்....'

'அவையின்ரை வசதிக்கு உது சரிவருமே?'

'கோமளம்.... அந்தப் பொடியனுக்கு ஒரு சல்லிக்காசு கூடத் தேவையில்லையாம். அழகும் குணமும்தான் முக்கியமாம். அந்தப் பொடியன் தாயைக் கேட்டு எழுதியிருக்கு. தாய்க்குப் பொடியன்ரை சந்தோசம்தான் முக்கியமாம். அதாலை பாக்கியமக்காதான் என்னைக் கேட்டவ. எங்களுக்குச் சம்மதமெண்டால் பொடியன் 'பொன்சர்' பண்ணிக் கூப்பிடுமாம்...'

"எதுக்கும் பிள்ளையிட்டை ஒரு வார்த்தை...."

"கேளன்.... கரும்பு தின்னக் கசக்கவே செய்யும்...?!"

சந்திரனை அவளுக்கு ஏற்கெனவே தெரியும்.

அவனின் உருவம் மங்கலாக மனதில் எட்டிப்பார்த்தது.

இறுதியாக அவனைக் கண்டு ஏழெட்டு வருடங்களாவது இருக்கும். இந்த ஏழெட்டு வருடங்களில் தன்னை நினைவில் வைத்துத் திருமணம்செய்ய விரும்புகிறான் என்றால்.... ஒருவிதத்தில் அவளுக்குப் பெருமையாகக்கூட இருந்தது.

மறுபுறம் பெற்றோர்களின் பொருளாதார நிலை- அதில் தனக்கு வலியவரும் வாய்ப்பை நழுவவிட்டு, பெற்றோருக்குச் சுமையாக வாழக்கூடாது என்ற எண்ணம்- சம்மதித்தாள்.

அதன் பின்னர் அப்பாவும், அம்மாவும் ஒரு இடத்தில் நிலையாக இல்லை.

பரபரப்பாகக் காரியங்கள் நடந்தேறின.

சம்பிரதாயப்படி வீடு தேடிவந்த பாக்கியமக்கா, வாயெல்லாம் பல்லாகச் சகுந்தலாவைக் கட்டிப்பிடித்து உச்சி மோர்ந்த கையோடு....

நல்லதொரு நாளில் கொழும்பு வந்து ஜேர்மனியை அடைந்தாள்.

சந்திரன் விமான நிலையத்துக்கு வந்திருந்தான்.

சொந்தக் 'கார்' இளம் பச்சை நிறத்தில்...

'கண்ணுக்கு அழகான கணவன். வசதியானவன்.... தான் கொடுத்து வைத்தவள்' என நினைத்துக்கொண்டாள் சகுந்தலா.

அவளின் வரவை அறிந்து அவனது நண்பர்கள் குடும்பமாக வந்து போனார்கள்.

"பொம்பிளை வீட்டிலை நான் ஒரு சல்லிக்காசுகூட வாங்கேலை. எல்லாம் என்ரை செலவுதான். சீலையள் நகையள்கூடச் சிங்கப்பூரிலை இருந்து வாங்கி வந்திருக்கிறன்...." என்று தனது பரந்த மனப்பான்மையைப்பற்றி மூச்சுக்கு முந்நூறுதடவை சொல்லிக்கொண்டான்.

முதலில் அது சாதாரணமாக இருந்தாலும், நாட்கள் செல்லச்செல்ல அது அவளுக்கு முள்ளாக உறுத்தியது.

'தன்னையொரு வாழவழியற்றவள்' எனப் பலருக்குப் பறைசாற்றுவதுபோல இருந்தது.

'இதற்காகவா சீதனம் வாங்காமல் கலியாணம் கட்டினான்...'

நாட்கள் செல்லச்செல்ல சந்திரனின் சுயரூபம் அவளுக்கு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்தது.

"சகுந்தலா.... 'ரொய்லட்'டை வடிவாய்க் கழுவு.... உடுப்பைத் தோய்ச்சு 'அயன்' பண்ணி வை.... சப்பாத்தைத் துடைச்சு வை... தேத்தண்ணி கொண்டு வா... காலைப் பிடிச்சு விடு... பொடியள் வாறாங்கள். நாலைஞ்சு கறியோடை சமைச்சு வை.... வேலையாலை களைச்சுப்போய் வாறன். உனக்கென்ன வீட்டிலை காலாட்டிக் கொண்டிருக்கிறாய்..."

சீதனமில்லாமல் திருமணம்செய்து வீட்டோடு வேலைக்காரியாக வைத்திருக்கத் தீர்மானித்துவிட்டான்போலும்.

அவளால் பெருமூச்சுத்தான் விட முடிந்தது.

"சகுந்தலா... ஐஞ்சாறு 'கிளாஸ்' கொண்டு வா..." என்றவாறு உள்ளே நுழைந்தான் சந்திரன்.

கையில் ஒரு துணி 'பாக்'. அதனுள் சில போத்தல்கள் சிணுங்கின. அவனைத் தொடர்ந்து ஐந்தாறு பேர் நண்பர்கள்.

வரவேற்பறையில் இருந்த மேசையில் போத்தல்களை எடுத்து அடுக்கினான்.

"மச்சான்! முதலிலை 'விடியோ' எடுக்கவேணும். என்னட்டை இருக்குது. நானும் சகுந்தலாவும் 'கேக்'கை வெட்டேக்கை நீ 'சூட்' பண்ணு..."

"பண்ணினால் போச்சு...."

"வடிவாய் எடுக்கவேணும். ஊரிலை அம்மா, மாமா மாமி எல்லாருக்கும் அனுப்பவேணும்.... ஏய் சகுந்தலா.... 'கிளாஸ்' எங்கை?"

"என்ன பொரிச்சனீ..... அதையும் கொண்டு வா..."

சகுந்தலா மௌனமாகப் பரிமாறினாள்.

"உதுக்குத்தான் சொல்லுறது, எங்கடை ஊர்ப் பொம்பிளையளைக் கலியாணம் செய்யவேணும் எண்டு. வேறை நாட்டுக்காரியளெண்டால் நீ உன்ரை வேலையைப் பார், நான் என்ரை அலுவலைப் பாக்கிறனெண்டு போய்விடுவாளவை..." என்றான் பாலன்.

"ஓமோம்.... செல்வம் ஒரு ஜேர்மன்காரியைக் கட்டி படுற பாடுதான் தெரியுமே? காசிருக்கோ இல்லையோ ஒவ்வொரு சனிக்கிழமையும் 'றெஸ்ரோரண்ட்'டிலை சாப்பிடவேணும். அவையவேன்ரை வேலையளை அவையவைதான் செய்ய வேணும். வேலையாலை வந்து அதை எடு, இதை எடெண்டு அதிகாரம் செய்யேலாது.... எங்கடை பொம்பிளையள் எவ்வளவு மேல்...."

"நான் சீதனம் வேண்டாமையெல்லே கலியாணம் கட்டினனான்..." என்று பெருமையாகக் கூறினான் சந்திரன்.

ஒருநாளைக்கு ஒருமுறையாவது சொல்லாவிட்டால் அவனுக்குத் தலைவெடித்துவிடும் போலும்.

சகுந்தலாவுக்கு அவமானமாகக்கூட இருந்தது. தன் தலைவிதியை நொந்துகொண்டாள்.

"என்ன 'ம்'மெண்டிருகிறாய்... இண்டைக்காலும் சிரிச்சுக் கொண்டிரன்...."

சிரிக்க முயன்றாள். முடியவில்லை.

"பட்டிக்காடு.... பட்டிக்காடு... ஆக்களோடை எப்பிடி 'மூவ்' பண்ணுறதெண்டே தெரியாது. எல்லாம் சொல்லிக் குடுக்க வேணும்...."

'நான் பட்டிக்காடென்றால் இவர்...!'

இவர்களின் தண்ணியடித் திருவிழாவுக்கு திருமணநாள் ஒரு சாட்டு. ஊரிலுள்ள உறவுகளை ஏமாற்றுவதற்கு ஒரு விடியோப் படப்பிடிப்பு.

இப்படியொரு போலி வாழ்க்கை தேவைதானா..!

'உலகமெனும் நாடக மேடையில் எல்லோரும் நடிகர்கள்' என்பதை சந்திரன் சொந்த வாழ்க்கையில் நிரூபிக்கிறானா? இதற்கு இவளையும் துணையாக....

வேதனையில் குமுறும் மனது வெறுப்படைந்து, அதில் சினம் கிளர்ந்தெழ, சகுந்தலா தன் மனவுணர்வுகளை, அடக்க முயன்றாள்.

"ஏய் சகுந்தலா... "

இம்முறை சந்திரனின் குரலில் போதையும் கலந்திருந்தது.

"கெதியாய் துணியொண்டு கொண்டுவந்து 'கார்ப்பெட்'டைத் துடைச்சு விடு. சிவா சத்தி எடுத்துப் போட்டான்..."

சந்திரனின் உத்தரவைக்கேட்டு ஒருகணம் விறைத்துப் போனாள் சகுந்தலா.

அந்நிய ஆடவனொருவனின் சத்தியைத் துடைக்க நானா கிடைத்தேன். இறைவா! ஏன் இப்பிடி ஒரு வாழ்க்கையை எனக்குத் தந்து சோதிக்கிறாய்? இரவிலே விபச்சாரியைப்போல அவனுக்காக என்று.... பகலிலே வேலைக்காரியிலும் கேவலமாக அவனுக்காக என்று.... இந்த இல்லற வாழ்க்கையிலே எனக்காக எந்தச் சுகத்தைத் தந்தாய்? இந்த நரக வாழ்வில் தினமும் செத்துப் பிழைப்பதைவிட என்னை ஒரேயடியாய் அழித்து விடு...


ராஜன் முருகவேல்

ஆற்றாமையுடன் இறைவனை மனதில் வேண்டியவளின் கண்களில் நீர்த் துளிகள் சில வெளிக்கிளம்பின.

"நான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறன். நீ உங்கை என்ன செய்யிறாய்..." என்றவாறு அங்கே வந்த சந்திரன், அவளின் கண்ணீரைக் கண்டு முகம் சுளித்தான்.

"இப்ப என்ன நடந்து போச்செண்டு இப்பிடி அழுகிறாய்? சத்தியைத் துடைக்கிறதிலை என்ன அவமானம்? இந்த வெளிநாட்டிலை இதுகள் எல்லாம் சர்வ சாதாரணம். இங்கை கனபேற்றை வேலையே எச்சில்கோப்பை கழுவுறதுதான்...."

தண்ணி, சாப்பாடு எல்லாம் முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள்.

"சகுந்தலா..."

"........"

"என்ன கோபமே... இங்கை வந்து பார். உனக்காக 'நெக்லஸ்' ஒண்டு வாங்கி வந்திருக்கிறன். இரண்டாயிரம் 'மார்க்'குக்கு மேலை..."

அழகாக பளபளக்கும் கற்களால் இழைக்கப்பட்டு ஜொலித்த 'நெக்லஸ்'ஸைத் தூக்கிக் காட்டினான்.

அதைப் பார்த்த சகுந்தலாவின் முகம் தாமரையாக மலர்ந்தது.

'என்னதான் ஏசினாலும் பேசினாலும் இவருக்கு என்னிலை அன்பு இருக்குதான். இறைவா! இப்பிடியொரு கணவனோடை நான் பல்லாண்டு காலம் வாழ நீதான் வரம் தரவேணும்..'

மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

இந்த ஒரு 'நெக்லஸ்'ஸை வைத்தே இன்னும் ஒரு வருடத்துக்காவது தன் தேவைகளை அவள் மனமகிழ்வுடன் நிறைவேற்றுவாள் எனக் கணக்கிட்டான் சந்திரன்.

*

## கிழக்கும் மேற்கும்

**மாமன்னன் அரிச்சந்திரன் - இறையன்பன் யோபு**



"மன்னனே! ஒருபொய் யுரைத்தால்
நாமன்று பெற்றுக் கொண்ட
நாட்டுடன் செல்வம் வாழ்வு
அனைத்தையும் தருவோம்" என்றார்!
"நாட்டினை இழந்தோம்; பெற்ற
மகனையும் இழந்தோம்; ஆனால்
பொய்யினை உரைக்க மாட்டோம்" -
எனப்பதில் உரைத்த வண்ணம்
செய்பணி நினைவில் மோதிக்
கைகளில் ஒளிர்ந்த வாளைப்
பெண்ணவள் கழுத்தை நோக்கி
வேகமாய் வீசி நின்றான்!
பெண்ணது கழுத்தை வெட்ட
வீசிய கொலைவாள்; போற்றும்
மாலையாய்ப் பெண் கழுத்தில்
வீழ்ந்திடக் கண்டபோது
மாமுனி நகைத்து நின்றார்!
வானவர் மலர் பொழிந்தார்!
சத்தியம் காத்து இன்னல்
பலகண்ட மன்னனுக்கும்
சத்தியப் பாதை தன்னில்
துணையான சந்திரமதிக்கும்
வாழ்த்துக்கள் பொழிந்தார் வானோர்!
தூங்கிப்பின் விழிப்பான் போல
வாய்மையைக் காக்கும் போரில்
உயிர்நீத்த தேவதாஸன்
எழுந்தோடி வந்தபோது
வளம்மிகு கோசல நாடும்
எழில்மிகு கொடியும் வாழ்வும்
பெற்றுள்ளம் மகிழ்ந்தான் மன்னன்!!

- முருகு

(தொடரும்..)

## A-9 ஐ நீளும் நினைவுகள்

பகுதி முப்பத்தெட்டு

சமர்க் கதைகளே எங்கும் உலாவின.
சமரின் செய்திகள் புதிது புதிதாக
அமர்க்களப்பட வைத்தன; ஆம்... அன்று
அளவெட்டி முதல் வலிமேற்கு ஈறாக
சமரின் ஆதிக்க வலையும் விழுந்தது.
சனங்கள் ஓடினர்; இரண்டு தினங்களுள்
சமரிட வந்தோர் சரிந்து பின் வாங்கினர்.
சனங்கள் 'முன்னேறிப் பாய்ந்தனர்' ஊருக்கு.

நவாலி ஆலயம் குருதி குளித்ததை
நினைத்து ஊர்மீட்கப் போயினர் தீரர்கள்.
"எவர்கள் எங்களை அகதியாய் மாற்றுவர்?"
என்று பாடித் திரும்பினர் ஊரவர்.
அவலம் முடிந்தது ஆறுதல் பூத்தது.
அடுத்த ஓரிரு மாதத்துள் ...எரிமலை
நவக்கிரி வரை அச்சுவேலியூடு
நகர்ந்து வந்தது.. 'இடி மின்னல்' தோன்றிற்று.



புத்தூர்ச் செம்பாட்டு மண்ணிற் பரவிய
பூகம்பந் தன்னால் மக்கள் கிளம்பினர்
"செத்தும் மீட்பமாம்" என்ற இளைஞரின்
செங்குருதியால் .. செம்பாட்டு மண் மேலும்
ரத்தச் சிவப்பாச்சு! வியூகம் உடைத்து .. தம்
வெற்றியால் 'யாழைத்' தம்கையால் மீட்டிடச்
சுத்தி வளைத்துப் படைகள் முயன்றன.
'சூரியக்கதிர்' சுரக்கத் தொடங்கிற்று.

ஜெயங்கொண்டான்

## நூல் அகம்

### அந்த ஒரு உயிர் தானா உயிர்?



'தோல்வியை ஏற்பது சுலபமல்ல' என்ற ஆசிரியர் தலையங்கத்தில், தமிழர் பிரச்சினைக்கு சிங்களப் பெரும்பான்மை பொதுமக்கள் உண்மையைத் தெரிந்து கொண்டால், நாட்டின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைகூகலாம். பேரினவாதம் பேசும் அரசியல் வாதிகளுக்கு அறைகூவல் விடுக்காது, சிங்களப் பெரும பான்மை மக்களுக்கே அந்த எண்ணக் கருத்தை சமர்ப்பிக்கின்றார் கோபு.

இலங்கையில் இந்தியப் படைகள் நோயாளிகளையும், வைத்தியர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் நசுக்கிக் கொலைசெய்ததற்கு, ஒரு இந்தியராவது இதுவரை வருத்தம் தெரிவித்தானா?, மன்னிப்புக் கேட்டானா?

ராஜீவின் உயிர் தான் உயிர், மற்றதெல்லாம்...? என்று அந்த 'உயிர்தானா உயிர்' என்ற ஆசிரிய தலையங்கத்தில் இந்திய மக்களிடம் நீதி கேட்கின்றார் ஆசிரியர்.

இலங்கைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில், நோர்வேயின் பங்கு அளப்பரியது. அவர்கள் இலங்கையின் சமாதானத்துக்கு நேரம், காலம் தெரியாது நோர்வேக்கும் இலங்கைக்குமிடையில் ஓடித்திரிபவர்கள். அவர்களின் சமாதான முயற்சி இடைநடுவில் முற்றுப்பெறாமல் போய் விடுமோ என்ற உணர்வில் 'நோர்வே எத்தனை காலத்துக்கு' என்ற ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கின்றார். இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு ஆசிரியர் தலையங்கமும் காத்திரமானவை, துணிச்சல் மிக்கவை.

இந்த நூலின் அட்டைப் படம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. கணினியில் பொறிக்கப்பட்ட இந்த நூல் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

ஈழத்துப் பிரபல பத்திரிகைகளில் பிரதம ஆசிரியராக இருந்த, எஸ்.எம்.ஜி. என்று அழைக்கப்படும் எஸ்.எம். கோபாலரத்தினம் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்' பத்திரிகையிலும், 'ஈழநாதம்' பத்திரிகையிலும் அவ்வப்போது எழுதிய ஆசிரிய தலையங்களில் சிலவற்றைத் தொகுத்து, நிகரி வெளியீட்டின் 'அந்த ஒரு உயிர் தானா உயிர்?' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

அவர் பத்திரிகைத்துறையில் 50 ஆண்டுகள் பூர்த்தி செய்த தன் நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தலையங்களில் அநேகமானவை, சிங்கள அரசாங்கங்களால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் கொடூரங்களையும், அவஸ்தைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வருபவையாக உள்ளன.

படிப்படியாக பத்திரிகைத் துறையில் தனது வளர்ச்சியையும், அந்த வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களையும் இந்த நூலில் இடம்பெற்றுள்ள 'என்னுரையில்' ஆசிரியர் குறிப்பிடத்தவறவில்லை.

நாளிதழ்களில் அவர் தீட்டிய ஆசிரிய தலையங்கங்கள் ஆணித்தரமானவை. எவருக்கும் அஞ்சாமல் விட்டுக்கொடுக்காமல் தனக்குச் சரியெனப்பட்டதைத் துணிந்து கூறியமையினால் கோபாலரத்தினம் அவர்கள் பலருடைய வெறுப்புக்களையும் சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மூத்த ஊடகவியளாலர் இரா.பத்மநாதன் குறிப்பிட்டது போன்று, இந்த நூலில் வெளிவந்துள்ள ஒவ்வொரு தலையங்களும் அவ்வப்போது நிகழ்ந்த அக்கிரமங்கள், அநியாயங்கள் பற்றி புட்டுக்காட்டுபவையாகவே அமைந்திருக்கின்றன.

- மணிசேகரன்

## பாலையும் சோலையும்

வரலாற்று விரிவுரைகள் - கலைப்பட்டதாரிகளோடும், சிங்கள டிப்ளோமா மாணவர்களோடும் இணைத்து ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட்டன. பரீட்சைக்கான தமிழ் இலக்கிய, இலக்கண, விமர்சன விரிவுரைகள் பொது, சிறப்பு(தமிழ்) பட்டதாரி மாணவர்களோடு சேர்த்துக் கற்பிக்கப்பட்டன.

இந்த இணைப்புக்களாலே எமக்கு, (தமிழ் டிப்ளோமா கற்றோருக்கு) நற்பலன்கள் பல விளைந்தன என்பதற்கு ஐயமில்லை. தமிழாசிரியர்கள் என்று தீட்டுப் (Sligma) பட்டவர்களாய்ப் பட்டதாரிகளிலிருந்து பிரிக்கப்பட்ட நிலை ஒழிந்து- அவர்களுடன் கற்கவும், பழகவும் நேர்ந்ததால் அவர்களில் நிலவிய உயர்வு மனப்பான்மையும், எங்களிடையே நிலவிய தாழ்வு மனப்பான்மையும் ஓரளவு ஒழிந்தன. சிங்கள மாணவரோடு கலந்துறவாடும் வாய்ப்பும் கிட்டியது. ஆங்கில விரிவுரைகளைக் கேட்கவும், அவற்றை விளங்கி வினாவுக்கு விடைஎழுதவும் திறன் உண்டாயிற்று. பல்கலைக்கழகங்களில் கற்றற்கும், பரந்த நோக்கு உண்டாகவும் வழியேற்பட்டது.

தமிழை மரபுமுறையாகக் கற்றுப் பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகளிலே தேறி, ஆசிரியர்ப் பயிற்சியோடு ஆங்கில எஸ்.எஸ்.ஸியிலும் சித்தி பெற்றுப் பல ஆண்டு ஆசிரியர்களாய் அனுபவம் பெற்றோரும் ஆசிரியர்ப் பயிற்சியோடு ஆங்கில எஸ்.எஸ்.ஸியில் சித்தி எய்திச் சில ஆண்டு ஆசிரிய அனுபவம் பெறறோருமாக எழுவர், 1953 இல் தமிழ் டிப்ளோமாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். பண்டிதர் க.இராசையா, அ.சரவணமுத்து, வே.பொன்னம்பலம், அந்தோனிப்பிள்ளை (அமரர்), தா.ஆறுமுகம், செல்வி புனிதவதி சுப்பிரமணியம் (பின்னாளில் திருமதி ஆறுமுகம்), நான் ஆகியோரே அந்த எழுவரும். என்னையும் செல்வி புனிதவதியையும் தவிர மற்றைய ஐவரும் முப்பது வயதைக் கடந்தோர். அக்கால நியதிப்படி ஓராண்டுக்கான சம்பளம் (மாதந்தோறும்) பெற்று ஈராண்டு பயில வந்தோர். 1952 ஜனவரி முதல் 1953 ஜூன் வரை ஒன்றரை ஆண்டுகளே கற்பித்த எனக்கும், ஏறக்குறைய அதேகாலம் கற்பித்த புனிதவதிக்கும் சம்பளத்தோடு கூடிய லீவு கிடைக்கவில்லை. (ஐந்தாண்டுக்குக் குறையாத ஆசிரிய சேவையினர்க்கே ஓராண்டுச் சம்பளத்தோடு கூடிய லீவு கிட்டும்) நாங்கள் இருவரும் எமது வகுப்பில் கடைக்குட்டிகள்.

'எளியவனாய்ப் பிறந்தாலும் இளையவனாய் பிறத்தல் கூடாது' என்பது பழமொழி. இந்தப் பழமொழிக்குப் பெண் என்ற காரணத்தால் புனிதவதி தப்பிக்கொண்டார். நானோ விரிவுரையாளர்களின் சிறப்பாகச் செல்வநாயகம் அவர்களின் மோதிரக்கையால் அடிக்கடி (வார்த்தை) குட்டுக்களுக்கு இலக்கானேன். மூத்தோரின் தவறுகளுக்கும் நானே அவரின் வாய்க்குள் நுழையவேண்டி நேரிட்டது. பழிக்கரப்பங்கதத்திலே (Satire) செல்வநாயகம் செல்வநாயகம்தான். 'நீங்கள்' என்ற மரியாதைப் பன்மையை விட்டு இறங்காமலே தமது வாக்குத் தீயினால் சுட்டு விடும் திறமை அவருக்கு இருந்தது. இந்தச்சூட்டுக்கு நான் இலக்காகக் காரணம் நான் இளையவனாய் இருந்தது மட்டுமல்ல, எழுத்தாளனாய் இருந்ததுந்தான். செல்வநாயகம் அவர்களின் குத்தலுக்கு ஆளான ஒரு சந்தர்ப்பத்தை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

டிப்ளோமா பயில்வின் இறுதியிலே ஓர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கான தலையங்கத்தைத் தெரிந்து, கட்டுரை மேற்பார்வையாளரான செல்வநாயகம் அவர்களுக்கு அறிவித்து அவரின் அனுமதியும், அறிவுரையும் பெற்றபின்னரே எழுதவேண்டும் என்பது நியதி.

ஆய்வுக் கட்டுரைக்கு 'நான் தேர்ந்துகொண்ட தலைப்பு 'தமிழில் சிறுகதை வளர்ச்சி'

தலைப்பிலேயே தகராறு!



'ஓ நீங்கள் எழுத்தாளர். பொருத்தமான தலைப்புத்தான். ஆனால் ஒன்று. சிறுகதை எழுதுபவர் எல்லாம் சிறுகதை பற்றி ஆராயலாம் என்று நினைப்பதுதான் ஆராயவேண்டிய விடயம்'.

நான் மௌனமாய் நின்றேன். அன்பர் வீரகத்தி பெற்ற பாடம் நான் அறியாததல்ல. அதனோடு அடிக்கடி அவரின் வாய்க்குள் நுழைந்து நுழைந்து, அவரிலே விபரம் புரியாததொரு அச்சமும் அந்நேரத்தில் என் வாயை அடைத்து விட்டது.

"சரி தலைப்பைத் தெரிந்துவிட்டீர்கள். கட்டுரையின் உள்ளடக்கம் பற்றி இரண்டு பக்கத்தில் எழுதிக்கொண்டு வாருங்கள்".

'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று மனத்தில் எண்ணிக்கொண்டு அவர் முன்னிலையிலிருந்து வெளியேறினேன். அவரின் குத்தல் கவலையை மட்டுமல்ல, உரோசத்தையும் கிளப்பி விட்டது. அன்று பிற்பகலே கட்டுரைச்சாரம் எழுதிக்கொண்டு சென்று கொடுத்தேன்.

"ஓகோ. உடன் பாயாசம் தயாரித்து விட்டீர்களோ? தாருங்கள். நாளை பின்னேரம் தமிழ்த்துறை அலுவலகத்தில் சந்தியுங்கள்" என்றார். அவ்வாறே சென்றேன். கட்டுரைச் சாரத்தை அவர் சொல்லுக்குச் சொல் கண்டனம் கூறி விமர்சித்தார். திருத்தங்களும் கூறினார். என் கண்கள் கலங்கியதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

ஒருவகையாக அவரின் மேற்பார்வையிலே ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து எமகண்டத்திலிருந்து தப்பிக்கொண்டேன் (அவரது தமிழ் இலக்கிய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டு என்ற இயலிலே தமிழ்ச்சிறுகதை சார்ந்த சில கருத்துக்களை அவர் அனுமதித்துள்ளமை வேறுகதை)

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

வான் உயர் தோற்றம் எவன் செய்யும் நன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## சுற்றிவளைப்புக்களும் கைதும்!

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கடந்த சில நாட்களாக, தமிழ்மக்கள் வாழும் பகுதிகளை இலக்குவைத்தும், தமிழ் இளைஞர், யுவதிகளைக் குறிப்பிட்டும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற சுற்றிவளைப்புக்களும், தேடுதல்களும், கைதுகளும் - போர் நிறுத்தத்திற்கு முந்திய நிலையை, மீண்டும் ஞாபகப் படுத்துவனவாக அமைகின்றன.

போர்க் காலங்களில் - கொழும்பில், நள்ளிரவு வேளைகளிலும், அதிகாலைகளிலும் பெருமெடுப்பிலான சுற்றிவளைப்பு நடத்தப்பட்டு - இரவுடைகளோடு தமிழ்ப்பெண்களும், இளைஞர்களும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட சம்பவங்களை ஒத்ததாகவே - நேற்றுமுன்தினம் - தெஹிவளை, கல்கிசை, மொறட்டுவ, இரத்மலானைப் பகுதிகளில் பாரிய சுற்றிவளைப்பு நடந்திருக்கிறது.

650 தமிழர்கள் இந்நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டு, விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் நேற்றுமுன்தினம் மதியம்வரை, தனித்தனியாகத் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன், இவர்களில் 39 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை - கொழும்பின் வீதிகளில் செல்லும் தமிழ்மக்களும், திடீர்திடீரென முளைக்கும் சோதனைச் சாவடிகளில் - நிறுத்தப்பட்டு, அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுவதுடன், சந்தேகமிருப்பின் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் சம்பவங்கள், ஓரிரு தினங்களில், பல இடங்களிலும் நடைபெற்றுள்ளன.

படையினரதும், பொலிஸாரினதும் இந்தப் போக்கு- தமிழ்மக்களை மீண்டும் சந்தேகப்பேர்வழிகளாக்கி, அவர்களைத் தனியான இரண்டாந்தரப் பிரஜைகளாக்கும் பேரினவாத வழிமுறையின் தொடர்ச்சியோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

மிகத் திட்டமிட்ட ரீதியில் - தமிழினத்தையே குறிவைத்து இவ்வாறு பாரிய தேடுதல்களும், கைதுகளும் இடம்பெறுவதை எவ்வகையிலும் அனுமதித்துவிட முடியாது.

கொழும்பில், அண்மையில் பாதாள உலகக் கோஷ்டிகளாலும், அரசியல் பழிவாங்கல்களாலும் - எதிரணிகளின் முக்கிய பிரமுகர்கள் கொல்லப்பட்டபோது - அவர்களைக் கொன்றிருக்கக்கூடியவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களே எனத் தெளிவாகத் தெரிந்தபோதும் - கொழும்பின் எப்பகுதியிலும் சிங்கள மக்கள் சுற்றிவளைக்கப்பட்டோ, இவ்வளவு பெருந்தொகையில் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டோ விசாரணைகள் நடக்கவில்லை.

அப்படியிருக்க - கொழும்பில் நடைபெற்ற சில சம்பவங்களினடிப்படையில் தமிழ் இளைஞர்கள் சிலர், அச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்படுவதை வைத்து - கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்களை ஒட்டுமொத்தமாக வதைப்பதாக, துன்பத்திற்காளாக்குவதாக - பாரிய தேடுதல் வேட்டைகளை மேற்கொள்வதும், தமிழ் இளைஞர், யுவதிகளை கும்பல்கும்பலாகப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று விசாரணைகளுக்குள்ளாக்குவதும், தடுத்துவைப்பதும்- இன அடிப்படையில் மேற்கொள்ளப்படும், பாரபட்சமிக்க ஒடுக்குமுறைச் செயற்பாடாகவே கொள்ளமுடியும்.

இத்தகைய நடவடிக்கைகள், சமாதானத்தின் மீதான தமிழர்களின் நம்பிக்கைகளைச் சிதறடிப்பதாக அமைவதோடு,

மீண்டும் தாம் ஒடுக்கப்படுகிறோம் என்ற உணர்வை, உளவியல் பாதிப்பைத் தமிழ்மக்களிடையே விரைவாகவே ஏற்படுத்திவிடும்.

இது, ஏற்கனவே அரசின் அமைதி முயற்சிகளில் நம்பிக்கையிழந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களை- மேலும்மேலும் பாதிப்படையவே செய்துவிடும்.

அதேவேளை - இத்தகைய போக்கு, ஓரளவு தணிந்திருப்பதாகத் தோன்றும் இனமுரண்பாடுகளை, மீண்டும் தூண்டிவிடவும் -

பேரினவாதச் சக்திகளும், சிங்களக் காடையர் குழுக்களும் - இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, தமிழினத்திற்கு விரோதமாக, முன்னர் வெளிப்படையாகவே செய்துவந்த அச்சுறுத்தல்களையும், மோசடிகளையும் மீண்டும் தொடங்கவும் வாய்ப்பு வழங்கிவிடும்.

அரசாங்கத்தின் முழுமையான ஆசீர்வாதத்துடன் தொடர்ந்தும் இத்தகைய நெருக்கடிகளும், அழுத்தங்களும் - தமிழ்மக்கள் மீது திணிக்கப்படுமிடத்து- அது அமைதிச் சூழலைப் பதற்றத்திற்குள்ளாக்குவதாகவே முடிந்துவிடும்.

---

### ரோக்கியோ நிதியுதவியில் இருந்து

# முதலில் தென்னிலங்கையிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாகும்

## நிதி அமைச்சர் சொக்ஸி கூறுகிறார்

(கொழும்பு)

ரோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கிடைத்த நிதியுதவிகளைக் கொண்டு - செப்ரெம்பர் மாதம் முதல் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரோக்கியோவில் கிடைத்த நிதியுதவியைப் பயன்படுத்தி முதற்கட்டமாக, தென்னிலங்கையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. செப்ரெம்பரில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும்.

அபிவிருத்தித் திட்டங்களில் - ரோக்கியோவில் கிடைத்த நிதியைச் செலவிடுவது தொடர்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கு - தனியான அலுவலகம் ஒன்று அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் நடந்ததைப் போலன்றி, நிதியை விரயமின்றிச் செலவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும், நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

---

# தமிழீழத்தை அமைத்துக்கொடுப்பதற்கு ஹெல்கிசன்-சொல்ஹெய்ம் தரகர்கள்!

## ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திசநாயக்க குற்றச்சாட்டு

இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில், தமிழீழம் அமையப் போகிறது. இதற்காக எரிக் சொல்ஹெய்மும், விதார் ஹெல்கிசனும் இடைத்தரகர்களாக அரசாங்கத்துடன் பேரம்பேசி வருவதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திசநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போது, அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒருபுறத்தில் தமிழீழத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெறுமனே தலையாட்டிப் பொம்மையாக இருந்து வருகிறார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட, அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் கைக்கூலியாகச் செயற்பட்டு வருகின்றார். ஏகாதிபத்தியவாதிகள் - அபிவிருத்தி, சமாதானம் என்ற பெயரில் பணத்தை வாரியிறைத்துப் புலிகளுக்கு நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்க வழிசமைக்கிறார்கள்.

புலிகள் தமக்கு எதிரானவர்களைக் கொழும்பில் வைத்தே கொலை செய்கின்றார்கள்.இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் அரசாங்கம், பாதாள உலகக் கோஷ்டியினரைக் கொண்டு எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைக் கொலை செய்துவருகின்றது.

இந்த நிலையில் நாட்டுக்கும், மக்களுக்கும் யார் பாதுகாப்பளிப்பது? நாட்டில் ஊழலும், கொள்ளைகளும் மலிந்துவிட்டன. பிரதமர் ரணில் உடனடியாக அரசாங்கத்தைக் கைவிட்டு வீட்டுக்குச் செல்லவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா-

இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதானால், விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை, இராணுவத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும். புலிகள் ஆயுதக் கலாசாரத்தைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்துக்கு வரவேண்டும்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடவில்லையானால், 38 வருடகால அரசியல் அனுபவத்தைப் பயன்படுத்தி, ஜே.வி.பி., புலிகளை அழித்தொழிக்கும் என்று மேலும் தெரிவித்தார்.

---

# மத்திய கிழக்குக்கு பணிப்பெண்களை அனுப்புவதில்லை எனத் தீர்மானம்!

## தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க

மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கையிலிருந்து பணிப்பெண்களை அனுப்பவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாக வேலைபார்க்கச் செல்லும் பெண்கள் மீதான துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளதாலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்ததாக, அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை - அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது. ஆங்கிலம், கணினி அறிவுள்ளவர்கள் மட்டுமே, இந்த வேலைவாய்ப்புகளுக்காகத் தெரிவுசெய்யப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# கடமையை நிறைவேற்றத்தவறுகின்ற அரச ஊழியர் மீது கடும் நடவழக்கை!

## அமைச்சர் அலிக் அலுவிகார எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களில் தமது கடமையைச் சரிவர நிறைவேற்றத் தவறுகின்ற ஊழியர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமது கடமையைச் சரிவர நிறைவேற்றத் தவறும் அரச ஊழியர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொறுப்புடன் பணிபுரியாதவர்களுக்கு, எந்த மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது. இவர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச ஊழியர்களில் பெரும்பாலானோர் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாமல், பொதுமக்களை அலைக்கழிப்பதாகத் தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்துவருகின்றன.

இவ்வாறு பொறுப்பற்று நடந்து கொள்பவர்களுக்கு, எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களை இடமாற்றம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேச செயலகங்களில் மக்களின் சேவைகள் பின்னடைவு கண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

மக்களின் வரிப்பணத்திலிருந்து சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்கள் - அவர்களுக்கு முறையான சேவையை வழங்கவேண்டியது அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது என்றும் அமைச்சர் அலிக் அலுவிகார மேலும் தெரிவித்தார்.

---

# மிலிந்தவின் வீட்டு கூரையில் விமான எதிர்ப்புத் துப்பாக்கி!

## நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பில்லையா?- மங்கள சமரவீர கேள்வி



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சர் மிலிந்த மொறகொடவின் வீட்டுக் கூரை மீது விமான எதிர்ப்புத் துப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்தினால் மட்டும் போதுமா? நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டாமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது -

கொழும்பிலிருந்த வீதிச்சோதனைச்சாவடிகளை அவசர அவசரமாக அகற்றிய அரசாங்கம், இப்போது அதனை இரவோடு இரவாக அமைத்து வருகின்றது.

வீதிச்சோதனைகளை அகற்றினால் பரவாயில்லை. நாட்டின் பாதுகாப்புக் குறித்து அவதானமாக இருங்கள் என்று, நாம் கூறினோம். ஆனால், அரசாங்கம் அதைப்பற்றிக் கண்டுகொள்ளவேயில்லை.

ஆனால், இப்போது பிரதமரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் மிலிந்த மொறகொட வீட்டின் கூரையில் விமான எதிர்ப்புத் துப்பாக்கி பொருத்தப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான பாதுகாப்பை அதிகரித்தால் மட்டும் போதுமா? நாட்டின் பாதுகாப்புக் குறித்து கவனம் எடுக்கவேண்டாமா? என்றும் அவர் மேலும் கேள்வியெழுப்பினார்.

# ரணிலின் சர்வதேச பாதுகாப்பு வலை

**ரணில் அறிவது!**

நீங்கள் ஏதோ சர்வதேச பாதுகாப்பு வலையொன்றை (**International safety net**) ஏற்படுத்தி வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சர்வதேச வலை - விடுதலைப் புலிகளையும், ஜனாதிபதி சந்திரிகாவையும் கட்டுப்படுத்தும் என்று பெருமையுடன் வேறு பேசியிருக்கின்றீர்கள்.

வலை என்று சொன்னால், இரண்டு விதமான வலைகள் உண்டு. ஒன்று மீன்வலை, மற்றையது கொசு வலை.

மீன்வலை என்றால், அது இரையை ஒன்றாகக் குவித்து, தன் பக்கம் இழுக்கும் வலை. எதிரிகளைத் தனக்குச் சாதகமாக இழுக்கும வலை.

கொசு வலையென்றால் - அது உள்ளே வரவிடாது தடுக்கும் வலை. அது எதிரிகளைத் தன்னிடம் ஒட்டவிடாது பாதுகாப்புக் கொடுக்கும் வலை. இதில் நீங்கள் சொன்ன இந்த சர்வதேச பாதுகாப்பு வலை என்பது - என்ன வகை வலையெனறு புரியவில்லை.

இதில் இன்னொரு வலையும் உண்டு. அதுதான் மாஓ சேதுங் சொன்ன வலை. "ஒரு அகதிக்கு மீனைக் கொடுப்பதைவிட, அவனுக்கு ஒரு வலையைக் கொடு" என்றார் அவர். இந்த வலைக்கு அர்த்தம் வேறு. ஒரு அகதிக்குத் தினமும் உணவு கொடுப்பதை விட, அவன் தொழில் செய்து, தனது சொந்தக் காலில் நிற்பதற்கான வசதியைச் செய்து கொடு என்பதே அதன் கருத்து. அதனைத்தான், மறைந்த சீனத் தலைவர் மாஓ சேதுங்- 'அகதி ஒருவனுக்கு மீனைக் கொடுப்பதை விட வலையைக் கொடு' என்றார்.

இன்று தமிழ் மக்களுக்குத் தேவை இந்த வலைதான். மாறாக நீங்கள் தயாரித்துள்ள சர்வதேசப் பாதுகாப்பு வலையல்ல. நீண்ட கால யுத்தத்தால் - அல்லற்பட்டு, அகதிகளாக, அனாதைகளாக, கட்டிய கந்தலைக் கழற்ற மாற்றின்றி - ஒட்டிய வயிறோடும், ஒருநேர உணவோடும் தள்ளாடும் அந்த மக்களுக்குத் தேவையான வலை அதுதான். அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கக் கூடியவகையில், தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பித் தமது தொழில்களைச் செய்வது. அதற்குத் தேவை அபிவிருத்தி. அதை வடக்கு- கிழக்கில் ஏற்படுத்தத் தேவை, இடைக்கால சபை, நிர்வாகம்.

நீங்கள் ஜப்பானுக்குப் போவதற்கு முன்னர், இந்த இடைக்காலசபை பற்றிக் கூறி, புலிகளையும் ஜபபானுக்கு அழைத்துச் சென்றிருக்கலாம். மாறாக, ஜப்பானிற்குச் சென்று அங்கு - வைத்து நீங்கள் இந்த இடைக்கால சபைபற்றி அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன?.

அதற்குக் காரணம் - நீங்கள் யாரோ ஒரு நாட்டின் சதி வலையில் சிக்கிக்கொண்டீர்கள் என்பதுதான். விடுதலைப் புலிகள் ஜப்பான் மாநாடுக்குச் செல்லக்கூடாது என்று எந்த நாடு விரும்பியதோ, அந்த நாட்டின் சதிவலையில் சிக்கியதால்தான், நீங்கள் இவ்வாறு செய்தீர்கள். அவ்வாறு உங்களுக்கு சதிவலை பின்னிய நாடு எதுவென்று, எங்களுக்குத் தெரியும். புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க வலைபோட்டுத்தேடும் அந்த நாடுதான் அது என்றும் எங்களுக்குப் புரியும்.

மேலும், அந்த நாட்டுக்கும், உங்களின் சர்வதேச பாதுகாப்பு வலை கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஏனென்றால், நீங்கள் தனது வலைக்குள் இருக்கவேண்டும் என்று அந்த நாடு நினைக்கின்றது. தன்னையும் சேர்த்து நீங்கள் சர்வதேச வலை பின்னுவதை அது விரும்பவில்லை. அதனால்தான், அந்த நாடு உங்கள் அமைச்சர் பீரிஸிடம் அது குறித்து முறைப்பாடு செய்துள்ளது. நீங்கள் அளவுக்கதிகமாகச் சர்வதேச நாடுகளின் வலைப் பின்னலில் சிக்கியுள்ளதாக அந்த நாடு குற்றஞ் சாட்டியுள்ளது.

ஏனென்றால், உங்கள் சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு வலையின் முக்கிய முடிச்சாக,

# மீன் வலையா? இல்லை கொசு வலையா?

தானே இருக்க அது விரும்புகின்றது. ஆனால, உங்கள் வலையில் முக்கிய முடிச்சாக இன்று இருப்பது வொஷிங்ரன்.

தங்கள் நாட்டில் நடத்தப்பட்ட மாநாட்டிற்கு, புலிகள் வரக்கூடாது என்று, அவர்கள் தங்களைச்சுற்றி ஒரு கொசு வலை போட்டார்கள். அந்தக்கொசுவலை மூலம், புலிகளை அமெரிக்காவுக்குள்ளே வருவதைத் தடுத்தார்கள். அவர்கள் போட்ட வலையால் வந்த வினைதான் - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் பக்கமே போகமுடியாமல் போனது. கடைசியாக அந்தக் கொசு வலையை, மீன் வலையாக மாற்றிப் புலிகளைப் பிடிக்க நினைத்தனர். வொஷிங்ரன் மாநாட்டிற்கு வரவேண்டாம் என்று சொன்ன வாயால், ஜப்பான் மாநாட்டிற்குக் கட்டாயம் வரவேண்டும் என்று வரவேற்று, மீன் வலை ஒன்றை விரித்தனர். வந்திருந்தால், அதில் புலிகள் - தாங்கள் மாட்டுப்படுவம் என்பதைப் புரிந்துகொண்டனர். கடைசியாய்த் தமிழ் மக்களுக்கு வலையும் கிடையாது, மீனும் கிடையாதுபோகும் என்பதைப் புரிந்து கொண்டனர். அதனால், அவர்கள் உங்களின் அந்த நரிவலையிலிருந்து தப்பிதத்துக் கொண்



டனர்.

'வேலிக்குப்போட்ட முள், காலுக்கு வினையாச்சு' என்கிற மாதிரி - இந்தச் சர்வதேச வலைதான் உங்களுக்குப் பெருத்த வினையாக வந்து முடிந்தது. இன்று புலிகளை, எப்படியாவது உள்ளே இழுக்கவேண்டிய சர்வதேச கட்டாயத்திற்கு நீங்கள் வந்துள்ளீர்கள்.

இதிலிருந்து தப்ப - எதுவும் செய்யமுடியாத நிலையில், இன்று அவர்களை வலிந்து, சண்டைக்கு இழுக்க, கடற்படைமூலம் சதி வலை ஒன்று வீசுகிறீர்கள். சண்டிலிப்பாயில் அவர்களின் முகாமைச் சுற்றி முறுக்குப்பிழிந்து, இராணுவத்தினர் பாதுகாப்பு வலையொன்றைப் பின்னுகின்றனர்.

உங்கள் சர்வதேச பாதுகாப்பு வலையோ. உயர்பாதுகாப்பு வலையோ, கொசுவலையாக விருந்து அவர்களை உங்களிடமிருந்து எட்ட வைக்கும் என்று கனவு காணாதீர்கள். அவர்கள், உங்கள் உயர்ந்த பாதுகாப்பு வலையை உடைத்துக் கொண்டே, கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தைத் தாக்கியழித்தவர்கள். அவர்களுக்கு இந்த வலை எம்மாத்திரம்.

அவர்கள், காற்றைப் போன்றவர்கள். காற்றுப்புக முடியாத இடங்களுக்கெல்லாம் அவர்கள் போவார்கள். உங்கள் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, அவர்கள் தென்றலாகத்தான் தெரிந்தார்கள். ஆனால், புறப்பட்டால் புயல் என்பதை ஆனையிறவில் புரியவைத்தார்கள். அவர்களுக்கா நீங்கள் வலை போடுகிறீர்கள். அந்தக் காற்றைக் கட்டுப்படுத்தவா நீங்கள் வலைபோடுகிறீர்கள்.

ஒரு போராளி அமைப்பு அல்லது விடுதலை அமைப்பு ஆரம்பிக்கும்போது, அது மீன்களைப்போல் இருக்கும் என்பார்கள். அவர்கள் மறைந்து வாழும் இடம்தான் தண்ணீர். அதாவது மீன்களைப் போன்ற போராளிகள் தண்ணீர் போன்ற மக்களிடம் வாழ்வார்கள். தண்ணீரை அள்ளி ஊற்றினால், அந்த மீன்கள் செத்துவிடும் அல்லது மீன்களை மக்கள் என்ற தண்ணீரிலிருந்து எடுத்து வெளியில் விட்டால், இறந்து விடும் என்பது வல்லரசுகளின் வரைவிலக்கணம்.

அந்தக் காலம் மலையேறிவிட்டது. இப்போது அந்தக் கெரில்லா அமைப்பு மக்கள் அமைப்பாக மாறிவிட்டது. இப்போது அவர்கள்தான் தண்ணீர். அவர்கள்தான் மீன். தண்ணீரைப் பிடிக்க வலையா?

புலிகளுக்கு வலைவீசுவதை விடுத்து, உங்கள் சர்வதேச பாதுகாப்பு வலையை, மீன் வலையாக மாற்றி - சந்திரிகாவை சமாதானத்தின் பக்கம் இழுக்கப் பாருங்கள், அதை கொசு வலையாக மாற்றி கதிர்காமரையும், ஜே.வி.பியையும் உள்ளே வரவிடாது பாருங்கள்.

உங்களுக்குக் கடைசியாகச் சொல்கிறேன் புலிகளைப் பிடிக்க இந்த வலைகள் ஒன்றும் வேண்டாம். அவர்கள் தமிழ் மக்களின் பாச வலைக்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்களைப் பிடிக்க வேண்டுமென்றால் பாசவலையை மட்டும் வீசுங்கள்.

புரியவில்லை..?

அதுதான்.. மாஓசேதுங் சொன்ன வலை.. 'ஒரு அகதிக்கு மீனைக் கொடுப்பதை விட ஒரு வலையைக் கொடு' என்று அவர் குறிப்பிட்ட அந்த வலையைக் கொண்டு மட்டும்தான் புலிகளை நீங்கள் பிடிக்கலாம். மக்களின் நலன் என்ற இரையைக் காட்டினால் மட்டுமே அவர்களைப் பிடிக்கமுடியும்.

ஏனென்றால், தமிழ் மக்களுக்காக அவாகள் எதையும் விட்டுக்கொடுப்பார்கள். தமிழ் மக்களுக்காக எந்த விலையும் கொடுப்பார்கள். அவர்கள் கட்டுப்படுவது மக்களின் பாசவலை ஒன்றுக்குத்தான்.

புரியும் என்று நினைக்கிறேன்.. புரிந்தால் சரி. □□

கனடாவிலிருந்து இரட்ணதுரை

# நெடுந்தீவு மக்களைத் துன்புறுத்தும் நிலப்பூச்சித் தொல்லை நீங்குமா ?

நெடுந்தீவுப் பகுதியில் - சுகாதார நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படாத நிலையில், கடந்த சில வருடங்களாக "நிலப்பூச்சி" என்ற பெயரிலான, விசித்திரமான- மிகவும் நுண்ணிய பூச்சியொன்றின் கடித்தொல்லைக்கு மக்கள் உள்ளாகி வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் இப்பூச்சிகளின் வாழ்விடம், மண்குடிசைகளாகவே இருந்தன. காலப்போக்கில் புதிதாகக் கட்டப்படும் வீடுகளிலும் இப்பூச்சியின் தொல்லைகள் அதிகரித்துள்ளது.

இப்பூச்சி கடிப்பதனால், கடுமையான கடுப்புத்தன்மையேற்படுவதுடன், கடித்த இடங்களை எப்படியாவது சொறிந்து கொள்ளவேண்டி ஏற்படுகிறது. இதனால், காயங்கள் ஏற்பட்டு வேதனை தொடர்கிறது. தூக்கத்தின்போது இப்பூச்சிகள் 'கால்' பகுதியிலேயே, தங்கள் திறமையைக் காட்டுகின்றன. எப்பக்கம் திரும்பிப் படுத்தாலும், இப்பூச்சி காற்பகுதியிலேயே பெருமளவு கடித்துத் தொல்லைப்படுத்துகின்றது.

இப்பூச்சியின் தொல்லையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, தற்போது நெடுந்தீவு மக்கள் நுளம்புச் சுருள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இந்தப் பூச்சியின் தாக்கம் சற்றுக் குறைவடைந்துள்ளது.

எனவே, இந்தப் பூச்சியை - நுளம்பினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கைக்கொண்டு, கட்டுப்படுத்தலாம் என்று இப்பகுதி மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால், நெடுந்தீவில் கடந்த பல ஆண்டுகளாக நுளம்புத் தடுப்பு நடவடிக்கைக்குக்கூட "மலத்தியோன்" மருந்து விசிறப்படவில்லை. பொது இடங்களிலோ, வீடுகளிலோ மட்டுமன்றி - நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில்கூட மலத்தியோன் விசிறப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், "நிலப்பூச்சி" யின் தொல்லை அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது. வெளியிடங்களிலிருந்து இங்கு வருவோர் கூட, "நிலப்பூச்சி இப்பவும் இருக்குதா" என்ற கேள்வியுடன் தான் வருகிறார்கள். ஏனெனில், இது போன்ற பூச்சி வேறு இடங்களில் இல்லை.

இப்பூச்சிகளின் தோற்றம், பரம்பல் பற்றி ஒரு கதை கூறப்படுகிறது. அந்நியர் ஆட்சிக் காலத்தில், இங்கு பெருமளவு "நாகதாளி" செடிகள் இருந்ததாகவும், அவற்றை அழிக்கும் நோக்குடன் பூச்சியினம் ஒன்று கொண்டு வரப்பட்டதாகவும், இதுவே நிலப்பூச்சி என்றும் சிலர் கூறுகின்றனர்.

தற்போது இங்கே நாகதாளிகளின் தொகையும் பெருமளவு குறைந்து, அழிந்துவிடும் நிலையில் உள்ளது. அத்துடன், அவற்றின் அழிவுக்குக் காரணம் நாகதாளி செடிகளில் 'பங்கசு' போன்று ஒரு வெள்ளைப்படிமமே ஆகும். நாகதாளிகள் அழிந்து செல்வதால், தம் வாழ்விடங்களை விட்டு இந்தப் பூச்சிகள் குடிமனைகளுக்குள் புகுந்து, இவ்வாறு தொல்லை கொடுப்பதாகவும் நம்பப்படுகிறது.

இப்பூச்சிகளின் கடிக்குள்ளாவோர், எவ்வாறான பின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படும் என தெரியாத நிலையிலேயே, மக்கள் இருந்து வருகின்றனர்.

இவ்வாறான விசித்திரப் பூச்சியினை இனங்கண்டு, இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பகுதியினர் விரைவாக மேற்கொண்டு, இப்பிரச்சி



செய்திக் கட்டுரை

னைக்கு முடிவினைக் காணவேணடும்.

நெடுந்தீவிலுள்ள சுகாதார அதிகாரிகள், இப்பூச்சிக் கடியினை அனுபவித்துக்கொண்டும், இதனைக் கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கைகளையும் இன்றுவரை மேற்கொள்ளாதிருப்பது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாரிகள் இந்த விடயத்தில் விரைந்து செயற்பட்டு, நிலப் பூச்சிக் கடிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று, பூச்சிக் கடியால் அல்லலுறும் மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள். இவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுமா?.

கண்ணன்

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்

# மத்திய கல்லூரி வீரர்கள் சதம் அடித்துச் சாதனை!

யாழ்.மத்திய கல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் - நேற்று முன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி - 4 விக்கெட்டுகளை இழந்து, 279 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

ஒரு கட்டத்தில் - 4 விக்கெட்டுக்களை இழந்து, 31 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த அணிக்கு- செல்ரன், டயான் ஆகிய இரு வீரர்களும் இணைந்து ஆடி, அணிக்கென 248 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

இதில் இருவரும் தலா ஒரு சதங்களைப் பெற்றுக்கொண்டனர். 14 வயதினருக்கான கிரிக்கெட் போட்டியில, இதுவே வடக்கிலுள்ள பாடசாலைகளில் முதலாவது சாதனையாகும்.

இதே அணியின் தலைவர் டானியல் - செவ்வாயன்று கனகரத்தினம் மகாவித்தியாலயத்துடன் நடந்த போட்டியில் ஒரு சதத்தைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# உடுவில் வைரவர் ஆலயத்தில் இயந்திரத் தகடுகள் அபகரிப்பு

(உடுவில்)

உடுவில் மல்வம் ஸ்ரீகந்தசாமி ஞானவைரவர் ஆலயத்தின் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள்- விக்கிரகங்களைப் பெயர்த்துவிட்டு, அதன்கீழ் இருந்த, இயந்திரத் தகடுகளை எடுத்துச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

இவ்வாலயத்தில் பல வருடங்களுக்குப் பின்னர், கடந்த மாதமே கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இதே வேளை, இவ்வாலயத்திற்கு அருகில் உள்ள இன்னுமொரு வைரவர் ஆலயத்திலிருந்து வைரவர் சூலத்தின் அங்கியும் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

(101)

## ஆவரங்கால் சிவன் உற்சவம்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் நடராஜா இராமலிங்கேஸ்வர சிவன்கோவில் வருடாந்த உற்சவம், கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து வரும் மாதம் 5 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(80)

# செவ்வாய்க்கான விண்கலம் புறப்படுகை பிற்போடப்பட்டது!



அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா'வின், செவ்வாய்க் கிரகத்திற்கான விண்வெளிப் பயணத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் - புளோரிடா மாநிலத்திலுள்ள கேப் கானாவரல் விண்வெளித் தளத்திலிருந்து 'வாய்ப்பு' (Opportunity) எனப் பெயரிடப்பட்ட, செவ்வாய்க்கான விண்கலம் - புறப்படத்தயாராக இருந்த போது,

நேற்று அப்பகுதியில் கடுமையான காற்று வீசியதால் - விண்கலம் புறப்படுவதற்கு 24 மணிநேரம் இருந்த வேளை, புறப்படுதல் பிற்போடப்பட்டது.

இதேவேளை- ஏற்கனவே, கடந்த 10 ஆம் திகதி - புளோரிடாவிலிருந்து புறப்பட்ட 'ஸ்பிரிட்' என்ற விண்கலம், தனது செவ்வாய்க்கான பயணத்தில் - செக்கனுக்கு 30 கிலோமீற்றர் என்ற அதிவேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது.

'நாஸா'வினால் அனுப்பப்பட்ட 'ஸ்பிரிட்' விண்கலம், புறப்பட 8 நாட்களுக்கு முன்பாக, 'ஐரோப்பிய மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலத் திட்டப்படி, 'பீகிஸ் - 2' என்ற விண்கலம் செவ்வாய் நோக்கிப் புறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விண்கலங்கள் யாவும் - அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் செவ்வாயை ஆராயும் பணிக்கான, இடங்களைச் சென்றடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# சதாமை எப்படியும் பிடிப்போம்; அமெரிக்க உயரதிகாரி சூளுரை!

## ஈராக்கில் தேர்தலை நடத்தவும் ஆர்வமாம்



போல் பிரேமர்

சதாம் ஹுசைனை எப்படியும் விரைவில் பிடித்துவிடப்போவதாக, ஈராக்கில் உள்ள அமெரிக்காவின் தலைமை நிர்வாகி போல் பிரேமர் தெரிவித்தார்.

உயிருடனோ அல்லது பிணமாகவோ சதாமைப் பிடித்துவிடுவதற்கான கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

சதாம் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை, பாத் கட்சியினரிடம் இருக்கிறது. அதனால், அமெரிக்கப் படையினருடன் சேர்ந்து செயற்பட அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று கூறிய போல் பிரேமர்,

தற்போது அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஈராக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் எரிச்சலைத் தருவதாகவும்,

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற, இப்படியான தாக்குதல்களைச் செய்வோரை அழிக்கவேண்டியிருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை - ஈராக்கில் போருக்குப் பின்னரான புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு, அமெரிக்கா முன்னேற்றங்கள் எதனையும் சந்திக்கவில்லை எனக் கூறப்படுவதையும் போல் பிரேமர் மறுத்துள்ளார்.

ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தி, புதிய தேர்தலை நடத்துவதற்கு வசதியாக, அந்நாட்டின் அரசியல் யாப்பை மீளமைப்பதற்குத் தற்போது முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவும்,

இதற்கென, அசியலமைப்புச் சபை அடுத்த மாதம் கூடுமெனவும் போர் பிரேமர் அறிவித்துள்ளார்.

# அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் மத்திய கிழக்கிற்கு திடீர் விஜயம்!

## இஸ்ரேல், பலஸ்தீனப் பிரதமர்களுடன் சந்திப்பு

இஸ்ரேலிய, பலஸ்தீனப் பிரதமர்களைச் சந்திப்பதற்காக, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டெலசா றைஸ், மத்திய கிழக்கிற்குத் திடீர் விஜயம் செய்துள்ளார்.

அமெரிக்காவின், மத்திய கிழக்கிற்கான புதிய சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏது நிலைகள் பற்றி ஆராயுமுகமாகவே அவரது விஜயம் அமைந்துள்ளது..

நேற்றுக்காலை, பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸைச் சந்தித்த கொண்டெலசா றைஸ், பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக இருந்ததாகத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றிரவு - இஸ்ரேலியப் பிரதமரையும் கொண்டெலசா றைஸ் சந்திப்பதாக இருந்தது.



கொண்டெலசாவுடன் மஹ்மூட்

கொண்டெலசா றைஸுடனான பேச்சுக்கள் பற்றிக் குறிப்பிட்ட பலஸ்தீன அதிகாரிகள் -

பலஸ்தீனப் பகுதிகள் அனைத்திலுமிருந்து, இஸ்ரேல் தனது புடைகளை விலக்கிக்கொள்ள வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டனர்.

மேற்குக்கரையிலுள்ள ஜெரிகோ நகரில், சுமார் நான்கு மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு நடந்தது.

கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், மத்திய கிழக்கிற்கு வந்துசென்ற ஓரிரு தினங்களுக்குள், கொண்டெலசா றைஸின் விஜயம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க - இஸ்ரேலியர்கள், பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து வாபஸ்பெற்றால், போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கலாம் என்ற நிலைப்பாட்டில் பலஸ்தீனப் போராளிக் குழுக்கள் இருப்பதாகவும்,

ஹமாஸ், இஸ்லாமிய ஜிஹாத் ஆகிய அமைப்புகள் ஓரளவு தளர்வுப் போக்கைக் கடைப்பிடித்தாலும் - ஃபற்றா மற்றும் அல் - அக்சா உட்பட மூன்று குழுக்கள் தமது நிலைப்பாட்டில் இறுக்கமாகவே இருப்பதாகத் தெரியவருகின்றது.

## தனியார் மயமாக்கலை எதிர்த்துப் போராட்டம்

# தென்கொரியாவில் ரயில்சேவை 70 வீதமளவில் செயலிழந்தது!



தென்கொரியாவில் - ரயில்வேத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் - அங்குள்ள 70 வீதமான ரயில் சேவைகள், கடந்த இரண்டு தினங்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றன.

தலைநகர் சியோலில் - ஆர்ப்பாட்டம் செய்த நூற்றுக்கணக்கான ரயில்வேத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து - தென்கொரியா முழுவதுமுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ரயில்வேயைத் தனியார்மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஆனால், ரயில்வேயைத் தனியார்மயப்படுத்துவதில் அரசு உறுதியாக இருப்பதைத் தொடர்ந்து - தென்கொரிய ரயில்வேத் தொழிற்சங்கங்கள் தமது கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

ரயில்வே, தனியார்மயப்படுத்தப்பட்டால் வேலைவாய்ப்புக்கள் பாரியளவில் குறைக்கப்பட்டுவிடும், பல தொழிலாளர்கள் வேலையிழந்துவிடுவார்கள் என்ற அச்சம் தொழிலாளரிடையே ஏற்பட்டிருக்கிறது.

## அமெரிக்கா, சிக்காக்கோ நகரில்

# மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்து பதினொரு பேர் சிக்குண்டு பலி!

அமெரிக்காவின் சிக்காகோ நகரில், மாடிக்கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் - குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டனர்.

மக்கள் குடியிருப்பொன்றில், ஒன்றுகூடல் நிகழ்வொன்று நடந்துகொண்டிருந்தபோது - மூன்றாவது மாடியின் பல்கனி, திடீரென வீழ்ந்ததாகவும் -

இதில் சிக்குண்டே, குறைந்தது பதினொரு பேர்வரையில் பலியாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இன்னமும் 40 முதல் 50 பேர்வரை இடிபாடுகளுக்குள் சிக்குண்டு இருக்கலாம் எனவும், மீட்புப் பணிகள் தொடர்வதாகவும் சிக்காகோவின் தீயணைப்புத் திணைக்களப் பேச்சாளர் லாரி லாங்போர்ட் தெரிவித்தார்.

# லைபீரியாவில் அமைதிப்படை அவசியம்; ஐ.நா. செயலாளர் வலியுறுத்துகிறார்!

லைபீரியாவிற்கு, சர்வதேச அமைதிகாப்புப் படை உடனடியாக அனுப்பப்பட வேண்டுமென, ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நடந்துவரும் கடும் சண்டையில், தினமும் பலர் கொல்லப்பட்டுவரும் நிலையில் - பெரும் மனித அவலத்தைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால், சர்வதேச அமைதிப்படை அங்கு அனுப்பப்பட வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக - சர்வதேச சமூகத்தை வலியுறுத்தும் கடிதமொன்றை ஜெனீவாவிலுள்ள ஐ.நா. செயலகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை - ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலின் தற்போதைய தலைவரான, ரஷ்யாவைச் சேர்ந்த செர்ஜி

உலகவலம்

லோரவ்விற்கும் - கோபி அனான், இது தொடர்பாகக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் - ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் செயற்படவேண்டும் என்றும், அவர் அக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க - லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் கடுஞ்சமர் நடந்துவருவதால், கானாவில் இடம்பெற்றுவந்த லைபீரிய அரசாங்கத்துக்கும் சண்டையில் ஈடுபடும் போராளிகளுக்குமான பேச்சுவார்த்தை இடையில் கைவிடப்பட்டிருக்கிறது.

மொன்ரோவியாவில் - கடந்த இரண்டு தினங்களில் நடந்த சண்டைகளில் மட்டும் 300 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், ஆயிரம் பேர்வரை படுகாயமுற்றதாக - அங்குள்ள மனிதாபிமானப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை -

லைபீரியாவைக் கண்டுபிடித்த



வர்கள், அமெரிக்காவிலிருந்து விடுதலையான அடிமைகளே என்பதால் - லைபீரியாவில் அமைதியைக் காக்க வேண்டிய பொறுப்பு, அமெரிக்காவுக்கு உள்ளதாக - பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் டீ லலி பின் கூறியிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் பதற்றம்

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் சனியன்று - இந்தியப்படையினர் மீது, காஷ்மீர் போராளிகள் மேற்கொண்ட தாக்குதல் - அங்கு பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

சுன்ஜ்வான் பகுதியிலுள்ள படைமுகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை பன்னிரண்டாக அதிகரித்துள்ளது.

# பல்கலை ப்ரெஞ் திரை விழாவில் இன்று திரையிடப்படும் படங்கள்



'எனது மாமா'வில் ஒரு காட்சி.

### எனது மாமா (MON ONCLE)

ஒரு கவித்துவமான அங்கதமாக அமையும் இத்திரைப்படம், சார்ளி சப்ளினின் Modern Times, Rene Clair's இன் A Nous La Liberte போல இயந்திரத்திற்கு எதிரான மனிதன் பற்றியது. Hulot, சிறிய Gerard Arpel. இன் மாமா, நேசம் மிகுந்த உறவினரான அவரது விசித்திரப் பாணியிலமைந்த செயல்கள், அதிநவீன போக்குடைய சிறுவனது பெற்றோரை ஈர்க்கத் தவறுகிறது. இந்தப் படைப்பு Tati இன் சிறப்பான நகைச்சுவைத் தரிசனத்தை வெளிப்படுத்துகிறது. அதேவேளை, அவர் விரும்பிய எளிமைத்தன்மையை அது இழக்கவும் இல்லை.

### கோட்டையில் வாழ்க்கை (LA VIE DE CHATEAU)

இத்திரைப்படம், இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளின் படையணிகள் Normandy இல் தரையிறங்க முன்னரான காலகட்டத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. மிக அமைதியான ஒரு கோடைக்காலம் அது. ஒரு பாழடைந்த மாளிகையில் பழிவாங்கும் இயல்புடைய ஒரு கிழவியும், உலக வாழ்வில் சலிப்புற்ற அவளது மகனும், அவனுடைய பரவசப்படுத்துபவளும், ஆனால் சலிப்படைந்தவளுமான இளம் மனைவியும் வாழ்கின்றனர். சுதந்திரப் பிரெஞ்சுப் படை அதிகாரியும், உள்ளூர் நாசி அதிகாரியும் அவள்மீது காதல் கொள்கின்றனர். அவளது அன்பை வெல்வதில் மூவருக்கிடையேயும் ஏற்படும் மகிழ்ச்சிகரமான ஒரு போட்டியை இத்திரைப்படம் சித்திரிக்கின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அஸ்கிரிய மகாநாயக்கரின் விஜயம் இறுதிநேரத்தில் ரத்து!

## போதிய பாதுகாப்பு இல்லையாம்

முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் - யாழ். வருவதாக இருந்த, பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் வண. உடுகம ஸ்ரீ புத்திரகித்த தேரரின் விஜயம் இறுதிநேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதிக்கும், சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் ஏற்பாட்டில் - நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அஸ்கிரிய மகாநாயக்கர் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# முஸ்லிம் மக்களின் பிரச்சினை; அமைச்சர் ஜெயலத்திடம் மகஜர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்று நேற்று அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா நேற்று மாலை 5 மணிக்கு - சேதமடைந்திருக்கும் முஸ்லிம் மக்களின் வீடுகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள் என்பவற்றையும் பார்வையிட்டார்.

இதேவேளை - மாலை 6 மணியளவில், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனும் முஸ்லிம் மக்களின் "மக்கள் பணிமனை" தலைவர் மௌலவி சுபியான் மற்றும் ஏனையோருடன் கலந்துரையாடினார். முஸ்லிம் மக்களின் சேதமடைந்துள்ள வீடுகளைப் புனரமைப்பதற்காக சீமெந்து, சீற் போன்ற பொருட்களை வழங்குவதாக, அமைச்சர் அப்போது உறுதியளித்ததாகவும் தெரிகிறது.

# போராட்டத்தின் ஆழத்தை உணர்த்து[ம்] நூல்கள் பலவும் வெளிவரவேண்டு[ம்]

## 'சமரும் மருத்துவமும்' நூல் வெளியீட்டில் புதுவை

'சமரும் மருத்துவமும்' என்ற நூல் - இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமானது. ஆயிரம் கவிதைகளுக்கு அப்பால், ஆயிரம் பாடல்களுக்கு அப்பால், ஆயிரம் இலக்கியங்களுக்கு அப்பால், இந்த நூல் - விடுதலைப் போராட்டத்தின் தேவைகளையும், அது தொடர வேண்டியதன் அத்தியாவசியத்தையும் உணர்த்துகின்றது.

இவ்வாறு - தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

போராளி மருத்துவர் தூயவன் எழுதிய 'சமரும் மருத்துவமும்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மேலும் உரையாற்றும்போது- கள மருத்துவப் போராளியாக, தனது அனுபவங்களை பதிவாக்கிய அதேவேளை, ஒரு இலக்கியவாதிக்குரிய, ஒரு கவிஞனுக்குரிய அத்தனை இலக்கியச் செழுமையையும் தூயவன் எடுத்தாண்டிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு, எவ்வளவு விலை கொடுத்தோம்?, எவ்வளவு துன்ப துயரங்களைச் சந்தித்தோம்? என்பதை வெளிப்படுத்துவதற்கு, இப்படியான நூல்கள் பல வெளிவர வேண்டும். எங்களுடைய களமுனைப் போராளிகளுடைய - களமுனை அனுபவங்களை எழுதினால், அவை பெரும் இலக்கியங்களாகவே வெளிவரும் என்றும் கூறினார்.




நூல் வெளியீட்டுவிழா மேடையில் - பிரமுகர்கள[ும்] நூலாசிரியரும், உள்ளே- புதுவை இரத்தினது[ரை]

இந்த நூல் வெளியீட்டு விழா- நேற்று மாலை யாழ். நாவலர் மண்டபத்தில், மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வெளியீட்டு விழாவின் ஆரம்பத்தில் - ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து வரவேற்புரையை 'வெளிச்சம்' ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டுவிழாவில் - யாழ்.மாவட்[ட] ... சியற்துறைப் பொறுப்பாளர் சி... பரிதி சிறப்புரையாற்றினார்.

இந்த நூலின் வெளி[யீட்டு]ரையை - கலை பண்பாட்டுக்க[ழகப்] பொறுப்பாளர் புதுவை இரத்தின[துரை] நிகழ்த்தினார்.

இந்நூலுக்கான மதிப்பீ[ட்டு]ரையை பேராசிரியர் சிவஞான... ரமும் (நந்தி), செம்பியன் செ...னும் நிகழ்த்தினர்.

இந்நூலை, மருத்துவக் கலா... சிவபாலன் வெளியிட்டு வைத்த[ார்]. இந்நூலின் முதற் பிரதியை எஸ்... எம். உரிமையாளர் தி... லிங்... பெற்றுக்கொண்டார். விழாவி[ன்] நிறைவில், நூலாசிரியர் தூயவ[ன்] பதிலுரையாற்றினார்.

# பாதுகாப்புக் கட்டமைப்பு மாற்றப்...

சட்டத்தின் மூலம் உருவாக்கப்படவுள்ள - தேசியப் பாதுகாப்புச் சபை (National Security Council) இற்கு ஜனாதிபதி தலைமை தாங்கலாம் அல்லது பிரதமர் தலைமை வகிக்கலாம்.

இந்தச் சபையில் - ஜனாதிபதியுடன், பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் மேலதிகமாக ஒன்று அல்லது இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்படுவர்.

தேசியப் பாதுகாப்புச் சபையானது - புதிதாக அமைக்கப்படவிருக்கும் பாதுகாப்புச் சபைக்கு (Defence Council) ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது, மக்கள் அச்சுறுத்தலின்றி வாழ்வதை உறுதிப்படுத்துவது, தேசிய பாதுகாப்புக் கொள்கைகளை வகுப்பதுடன்,

கடல், வான், தரை எல்லைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, வெளிநாட்டுக் கொள்ளை இலக்குகளை (Foreign Policy Objectives) இனங்கண்டு நடைமுறைப்படுத்த உதவுதல், உள்நாட்டு - வெளிநாட்டு அச்சுறுத்தலிலிருந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் செயற்படவுள்ளது.

இந்தக் குழுவுக்குச் செயலாளர் ஒருவரும் நியமிக்கப்படுவார்.

தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் - மாதமொரு தடவை கூட்டப்படும் அல்லது சபையின் தலைவர் கோரினால் விசேடமாகக் கூட்டப்படலாம். இக்கூட்டத்திற்கு ஜனாதிபதி தலைமையேற்கலாம். ஜனாதிபதி இல்லாதவிடத்து பிரதமர் தலைமை தாங்கலாம். பிரதமரும் இல்லாவிடில், தேர்ந்தெடுக்கப்பட்ட இன்னொருவர் தலைமை தாங்கலாம். ஆகக்குறைந்தது நான்கு உறுப்பினர்கள் இருந்தாலே (கோரம்) இச்சபையின் கூட்டத்தை நடத்தமுடியும்.

தேசிய பாதுகாப்புச்சபைக்கு நிரந்தர ஆலோசகர் குழுவொன்றும் நியமிக்கப்படும். இந்தச் சபையின்- திறைசேரிச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உள்துறை அமைச்சின் செயலாளர், முப்படைகளினதும் தளபதிகள், புதிதாக அமைக்கப்படவுள்ள இணைந்த படைத்தலைமையதிகாரிகளின் குழுவின் தலைவர் (Chairman of the Joint chiefs of staff Committee), புலனாய்வுச் சேவைகளின் தலைவர்கள் இடம்பெறுவர்.

### பாதுகாப்புச் சபை (Security Council)

இதேவேளை - உயர்பாதுகாப்புக் கட்டளைச் சட்டடத்தின் மூலம், பாதுகாப்புச்சபை (Security Council) ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

பாதுகாப்புச் சபைக்கு, பாதுகாப்பு அமைச்சர் தலைவராக இருப்பார்.

இவருடன் - பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இணைந்த படைத் தலைமையதிகாரிகள் குழுவின் தலைவர், முப்படைகளினதும் தளபதிகள், புலனாய்வுச்சேவை நிறுவனங்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக இருப்பர்.

ஜனாதிபதி விரும்பினால், இந்தச்சபையின் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கலாம். இல்லையேல், பாதுகாப்பு அமைச்சரே தலைவராக இருப்பார். அவர் இல்லாவிட்டால், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமை தாங்குவார்.

பாதுகாப்புச் சபையின் கூட்டம் வாரத்திற்கு ஒருமுறை இடம்பெறும் அல்லது தலைவர் கோரிக்கை விடுத்தால் விசேடமாகக் கூட்டப்படும். இந்தக் கூட்டத்தையும் ஆகக் குறைந்தது (கோரம்) நான்கு உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தாலேயே நடத்தமுடியும்.

விசேடமாக இந்தச் சபையின் கூட்டத்திற்கு - உள்துறை அமைச்சர், உள்துறை அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் சேவைக் கட்டுப்பாட்டாளர்கள் அழைக்கப்படலாம்.

பாதுகாப்புச்சபை - தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான பாதுகாப்புக் கொள்கைகளை அமுலாக்கம் செய்வது, பாதுகாப்பு இலக்குகளை எட்டுவதற்கான நவீன போர் வெல்லும் படைகளை (Modern Battle Winning Forces) உருவாக்க முயற்சிப்பது, அவசர சூழ்நிலைகளில் திட்டங்களை முன்னெடுக்கவும், தந்திரோபாயங்களை வகுக்கவும் நடவடிக்கை எடுப்பது, நாட்டின் பாதுகாப்புக்கென ஒதுக்கப்படும் நிதி - சரியான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிசெய்தல், மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிசெய்தல், தேசிய பாதுகாப்புச் சபையின் உத்தரவுகள் சரியாக முன்னெடுக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் அதிகாரங்ளைக்கொண்டும் செயற்படும்.

### இணைந்த படைத்தலைமை அதிகாரிகள் குழு (Joint Chiefs of staff Committee)

உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள - இணைந்த படைத்தலைமை அதிகாரிகள் குழு (Joint Chiefs of staff Committee) வுக்கான தலைவரை ஜனாதிபதியே நியமிப்பார்.

இந்தக் குழுவில், முப்படைகளினதும் தளபதிகள், புலனாய்வுச் சேவை நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் இடம்பெற்றிருப்பர்.

இந்தக் குழுவின் தலைவராக முப்படைத்தளபதிகளில் ஒருவர் நியமிக்கப்படலாம். இவர் - ஜெனரல் அல்லது அட்மிரல் அல்லது ஏயர் சீவ் மார்ஷல் பதவியில் அமர்த்தப்படுவார்.

இந்தக் குழுவின் தலைவர் இறந்தால் அல்லது இராஜினாமாச் செய்தால் அல்லது பதவி விலக்கப்பட்டால் - ஜனாதிபதியே இன்னொரு தலைவரை நியமிப்பார்.

மருத்துவக் காரணங்களுக்காகவோ, ஒழுங்காற்று நடவடிக்கை காரணமாகவோ, திறமையற்றவர் என அமைச்சரவை தீர்மானித்தாலோ, நேர்மையற்ற ...த்தில் நடந்ததாக உறுதிப்படுத்தினாலோ இந்தக் குழுவின் தலைவரைப் பதவிவிலக்க முடியும்.

இந்தக் குழு - முப்படைகளினது பயிற்சி மற்றும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொறுப்பாக இருக்கும். அத்துடன், அரசாங்கத்திற்கு இராணுவ ஆலோசனைகளையும் வழங்கும்.

படையினருக்கான - ஆட்பலம் மற்றும் ஆயுத தேவைகள் குறித்தும், முப்படைகளுக்கான உபகரணங்களை வழங்குவது தொடர்பாகவும், ஐ.நா.சமாதானப் படைக்கு ஆட்களை அனுப்புவதற்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பாகவும், நவீன பாதுகாப்புத் தொழிற்நுட்ப சாதனங்களை அறிமுகப்படுத்தவும் அல்லது நடைமுறைக்குக் கொண்டுவருவதிலும் இக்குழு கவனம் செலுத்தும்.

அத்துடன், தேசிய பாதுகாப்புச் சபையுடன் இணைந்து புலனாய்வுத் தவல்களையும் இக்குழு ஒருங்கிணைக்கும்.

மேலும் - முப்படைகளுக்கும் இடையிலான தொடர்பைப் பேணுவதுடன் ஆட்கள் மற்றும் உபகரணத் தேவைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு, இக்குழு ஆலோசனை வழங்கும்.

இந்தக் குழுவிற்கு பிரதம படையதிகாரி (Principal Staff Officer) ஒருவர் நியமிக்கப்படுவார். இவர் முப்படைகளில் ஒன்றைச் சேர்ந்த- மேஜர் ஜெனரல் அல்லது றியர் அட்மிரல் அல்லது ஏயார் வைஸ் மார்ஷல் தரத்தைச் சேர்ந்தவராக இருப்பார்.

பிரதம படையதிகாரி- இணைந்த படைத்தலைமை அதிகாரிகளின் குழுவின் தலைவருக்கும், குழுவுக்குமிடையிலான தொடர்புகளைப் பேணவும், இதன் நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பையும் கொண்டிருப்பார்.

### கட்டளைத் தலைமையகங்கள்

ஆயுதப்படைகளின் போர் நடவடிக்கைகளை இணைப்பதற்காக- இரண்டு கட்டளைத் தலைமையகங்களும் அமைக்கப்படவுள்ளன.

கூட்டு நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தலைமையகம் (Joint of Specific Combat Command)- இணைந்த நடவடிக்கைத் தலைமையகம் (Joint Operations Command) மற்றும் கடல்வழி நடவடிக்கைக்கான படைகளுக்குரிய கட்டளைத் தலைமையகம் (Maritime Forces Command) ஆகிய பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

கூட்டு நடவடிக்கைகளுக்கான இணைப்புத் தலைமையகம் - தேசியப் பாதுகாப்புச்சபையுடன் இணைந்து முப்படைத் தளபதிகளின் வழிநடத்தல்களுடன் நடவடிக்களை மேற்கொள்ளும்.

அதேவேளை, கடல்வழி ந[டவ]டிக்கைக் கட்டளைத் தலைமயக[ம்] கடல்வழி நடவடிக்கைகளுக்க[ான] கட்டளைகளை வழங்குதல், க... வலயப் பகுதியைக் கண்கான[ித்]தல், பாதுகாப்பு வழங்குதல் போ[ன்ற] பணிகளைக் கவனிக்கும் என[த்] தெரியவருகிறது.

பாதுகாப்பு மறுசீரமை[ப்பு] ஆணைக்குழுவின் சிபார்சுகளு[க்கு] அமைவாகவே அரசாங்கம் இ[ந்] நடவடிக்கைகளை எடுக்கத் த[ீர்மா]னித்துள்ளது. இந்த ஆணைக்[குழு]வில் பாதுகாப்பு அமைச்சின் செ[யலா]ளர் ஒஸ்ரின் பெர்னாண்[டோ], திறைசேரிச் செயலாளர் சரித்த... வத்த, முன்னாள் இராணுவத் [தள]பதி லெப் ஜெனரல் டெனிஸ் ... ஆகியோர் இடம்பெற்றிருந்த[னர்].

இந்தக் குழுவில் இறுத[ியாக] மேஜர் ஜென்ரல் அசோகா ... வர்த்தனவும் இடம்பெற்றிருந்[தார்] என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகள் பற்றி தகவல்...

என்றும் பொலிஸ்மா அதிபர் எச்சரித்துள்ளார். இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டுவருவது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணையாளர்கள் தொடர்ந்தும் தமது விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, ஓய்வுபெற்ற சி... பொலிஸ் அத்தியட்சகர் மெ... குணதிலக ஆகியோரைக் கொண்[ட] இந்தக்குழு விசாரணைகளை, அ... கைகளாகத் தயாரித்துவருகிற[து].

இந்தக்குழு- புலனாய்வாளர்களின் படு[கொ]லைகளினால் பின்னடைவுகள் ஏ... ஏற்பட்டுள்ளதா என்பது பற்றி[யும்] கருத்தில் எடுக்கும் என அறி[விக்]கப்பட்டுள்ளது.

இந்திய பரம்பரை ஜோதி[டம்]

அருள்வாக்கு அம்பிகா அம்மா
மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டா[ம்]
உடனே அம்மாவைச் சந்தியுங்கள், நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்[மா]
மடோனா லொட்ஜ், (சி/
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவலர்ஸ்/நியூ லிங்கம் கூல்பார் அ...

வேலையாள் தேவை

மாலிசந்தி அல்வாய் றோட்டில் இருக்கும் செல்லம்மா அரைக்கும் ஆ... வேலை ஆள் தேவை. சம்பள விபரம் நேரில்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
க.புவனேந்திரன் (அப்பண்ணா)
கண்டாவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(சி/1133)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்ப[ட்டது]